# இயேசுவின் மனுஷீக ஜீவ – உரிமைகள்

- ரீப்பிரிண்ட்ஸ் கட்டுரைகள்

# இயேசுவின் மனுஷீக ஜீவ–உரிமைகள்

***மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் மனுஷீக ஜீவ–உரிமைகள் தொடர்பாக சகோ. ரசல் அவர்களினால் எழுதப்பட்டுள்ள ரீப்பிரிண்ட்ஸ் கட்டுரைகள், பதில்களின் தொகுப்பு மற்றும் மொழியாக்கம்.***

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | R4637 I இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை | |
| 2. | R5085 I கிறிஸ்துவினுடைய பலி | |
| 3. | R5621 I நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ–உரிமைகளின் சாற்றப்படுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் | |
| 4. | R5341 I இரத்தத்தில் ஜீவன் இருக்கின்றது | |
| 5. | R4461 I எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம் | |
| 6. | R4905 I நமது கர்த்தருடைய ஜீவ–உரிமைகள் மீதான கேள்விகள் | |
| 7. | R4587 I தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | |
| 8. | R4642 I ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை | |
| 9. | சகோ. ரசல் அவர்களின் பதில்கள் | |

**R4637**

# இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை

பறிக்கொடுக்கப்பட்ட/இழந்துபோகப்பட்ட ஜீவன் என்பது பலியாக்கப்பட்ட ஜீவனல்ல. நமது கர்த்தர் ஒருவேளை தம்முடைய ஜீவனை பறிக்கொடுத்திருந்திருப்பாரானால், அது ஒரு பலி ஆகாது. பறிக்கொடுக்கப்பட்ட/இழந்துபோகப்பட்ட ஜீவன் என்பது ஏதோ ஒரு நீதியான காரணத்திற்காய் எடுத்துக்கொள்ளப்பட்ட ஜீவனாய் இருக்கின்றது; ஆனால் அவருடைய ஜீவனானது காரணமில்லாமல், அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர் பாடுபட்டார். அவர் எப்படிப் பாடுபட்டார் மற்றும் ஏன் பாடுபட்டார் என்பது தொடர்புடைய விஷயத்தில், "அவர் தேவன் முன்னிலையில் பிழையற்றவராய்க் காணப்பட்டார்" என்று வேதவாக்கியங்களானது தெள்ளத்தெளிவாய் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. தேவனுடைய சித்தம் செய்ய வேண்டும் என்ற நோக்கமுடையவராய் அவர் காணப்பட்டார்; தேவ சித்தத்திற்கு அவர் தலை வணங்கினார்; தேவ சித்தத்தை நிறைவேற்றும்படியாக அவர் தமது முழு ஜீவியத்தையுமே அர்ப்பணம் பண்ணியிருந்தார். அவரது உண்மையினையும், கீழ்ப்படிதலையும் முழுமையாய்ப் பரீட்சிக்கத்தக்கதாக, அவர் "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும்" கீழ்ப்படிதலுள்ளவராகவும், கட்டுப்பட்டு நடப்பவராகவும் காணப்பட தேவன் எதிர்ப்பார்த்தார். அவரது ஜீவனானது அவரிடமிருந்து தேவனாலோ அல்லது மனிதர்களாலோ பறித்தெடுக்கப்படவில்லை; அவர் சொல்லியிருந்ததுபோல, திவ்விய உதவிக்காக அவர் கேட்டுக்கொண்டிருந்திருக்க முடியும் மற்றும் இப்படிக் கேட்டிருந்தாரானால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்கள் அனுப்பிவைக்கப்பட்டு, அவருடைய ஜீவனைப் பாதுகாத்திருப்பார்கள்; "என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக்கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன்." (யோவான் 10:18 திருவிவிலியம்). ஆகையால் இயேசுவினுடைய பலியின் விஷயத்தில், மனுஷன் அவருடைய ஜீவனை எடுத்துப்போடவுமில்லை, தேவனும் அதைக் கேட்கவுமில்லை, மாறாக அவரது நேர்மையினை நிரூபித்து விவரிப்பதற்கான வாய்ப்பினை அவருக்குத் தேவன் கொடுத்தார்; இதில் பலி ஒன்று சம்பந்தப்பட்டுள்ளது; அதாவது இது தேவன் விரும்பியதை - தமது பூமிக்குரிய உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்துவிடுவதைக் குறிக்கும் காரியத்தை - நிறைவேற்றிடும் நிலைக்கு அவரை ஆளாக்கியது/வழிநடத்தியது.

அவரது மரண நேரத்தின்போது, அவர் தம்முடைய புண்ணியத்தைக் குறித்து: "இதை நான் இன்ன நோக்கத்திற்காகவும், இன்ன காரியத்திற்காகவும் செய்கின்றேன் மற்றும் என்னுடைய கீழ்ப்படிதல் நிமித்தமாய் உண்டாகும் புண்ணியம் எதையும், இன்ன ஒரு நோக்கத்திற்காகப் apply/**பயன்படுத்துகின்றேன்**" என்று கூறி, அவர் முன்கூட்டியே தம்முடைய புண்ணியத்தினைப் **பயன்படுத்தவில்லை.** இப்படியாக அவர் ஏதும் செய்யவில்லை. இப்படி அவர் பயன்படுத்திடவில்லை. கிறிஸ்துவின் மரணத்தினை முழு உலகத்தினுடைய பாவத்திற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமென நாங்கள் பேசுகையிலும், "அனைவரின் மீட்பிற்காக அவர் தம்மையே ஈடாக தந்தார்" என்று நாங்கள் பேசுகையிலும், மனுக்குலத்தின் உலகத்திற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகிய அந்தப் பலியினுடைய புண்ணியத்தினைக் கர்த்தராகிய இயேசு அவர்களுக்காகப் பயன்படுத்த வாய்ப்புள்ள திவ்விய ஏற்பாட்டின் மற்ற அம்சங்களையும்கூட நாங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளவே செய்கின்றோம். இவைகள் இவைகளுக்கான ஏற்றகாலத்தில் நிறைவேற்றப்படும் (1 தீமோத்தேயு 2:5, 6; திருவிவிலியம்). இவை அவர் மரித்தபோது நிறைவேற்றப்படவில்லை, மாறாக இனிமேல் நிறைவேற்றப்பட வேண்டியவையாய் இருக்கின்றது.

மரணபரியந்தமுமான தம்முடைய கீழ்ப்படிதலை நமது கர்த்தர் வெளிப்படுத்திட்ட பிற்பாடு, பிதா தாம் குறிப்பிட்டுள்ள அல்லது வாக்களித்துள்ள அனைத்தையும் நிறைவேற்றவும் மற்றும் இவைகளுக்கும் மேலாக நிறைவேற்றவும் பிரியமாய்க் காணப்பட்டார். ஆகையால் அவர் ஏற்கெனவே காணப்பட்ட மனித நிலைமையில், அவரைத் தேவன் மரணத்திலிருந்து எழுப்பாமல், மாறாக "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய்" திவ்விய சுபாவத்தினுடைய மகிமையான நிலைமைக்கு எழுப்பினார். நமது கர்த்தரைப்

பூமிக்குரிய சுபாவத்திற்குக் கொண்டுவருவது என்பது பிதாவிற்குக் கூடுகிற காரியம்தான்; ஆனால் இப்படிச் செய்வது என்பது, நாம் புரிந்திருக்கிறபடி "அவருக்கு முன் இருந்த சந்தோஷம்" என்ற இந்த விசேஷித்த கீழ்ப்படிதலுக்கு, விசேஷித்த வெகுமானம் கொடுக்கப்படும் என்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதான தம்முடைய வாக்குத்தத்தத்தைப் பிதா நிறைவேற்றுவதாக இராது.

## இயேசு பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையினை உடையவராவார்

மூன்றாம் நாளில் நமது கர்த்தர் பிதாவினால் மரணத்திலிருந்து, இப்பொழுது அவர் பெற்றிருக்கின்றதான இந்த மகிமையான சுபாவத்திற்கு உயர்த்தப்பட்ட போது - பூமிக்குரிய சுபாவத்தைக்காட்டிலும் அதிகம் மேலான சுபாவத்திற்கு உயர்த்தப்பட்ட போது, அவர் பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையையும்கூட உடையவராகவே காணப்பட்டார். தம்முடைய உயர்வான சுபாவத்தினை (exchange) மாற்றாகக்கொடுத்துவிட்டு, பூமிக்குரிய சுபாவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கர்த்தர் நிச்சயமாகவே எண்ணியிருந்திருக்க மாட்டார்; அதிலும் விசேஷமாக இத்தகையதொரு மாற்றிக்கொள்ளுதலானது, தேவனுடைய முழுத்திட்டத்தையும் சீர்க்குலைவிற்குள்ளாக்கும் காரியமாய் இருக்கும் என்கிறபோது, கர்த்தர் இப்படி நிச்சயமாகவே எண்ணியிருந்திருக்க மாட்டார். இதோ விவரிக்கின்றோம்: ஒருவேளை மரணத்திலிருந்து பிதாவின் மகிமைக்கு, திவ்விய சுபாவத்திற்கு எழுப்பப்பட்டுள்ளதான நமது கர்த்தர் இயேசு பின்வருமாறு: "பிதாவே என்னை இவ்வளவு உயர்வாய் உயர்த்தினதில், எனக்கு நீர் பாராட்டியுள்ள அன்பையும், தயவையும் நான் பெரிதும் மதிக்கின்றேன்; ஆனாலும் இப்பொழுதோ நான் மனுஷீக சுபாவத்தையே விரும்புகின்றேன்" என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள்ளலாம். ஒருவேளை அவர் இப்படியாகப் பேசுகின்றார் என்று நாம் கற்பனை பண்ணினால்கூட, அவரது மனுஷீக ஜீவனை அவர் ஒருபோதும் பறிக்கொடுக்காத காரணத்தினால், அதற்கான உரிமையினை உடையவராகத்தான் அவர் காணப்படுவார் என்றே நாம் பார்ப்போம். அவர் அதை laid it down/ கொடுத்து வைத்து மாத்திரமே இருந்தார். தேவனுக்கான கீழ்ப்படிதலில் அவர் தம்மையே ஒப்புக்கொடுத்துவிட்டார்; மற்றும் ஒருவேளை அவரது உயிர்த்தெழுதலில் அவர் பூமிக்குரிய சுபாவத்தினை விரும்பிட்டாலும், அதனை திரும்பவும் அவர் ஒருவேளை பெற்றுக்கொள்வதும் முற்றிலும் தகுதியானதே. ஆனால் ஒருவேளை அதை அவர் திரும்பவும் எடுத்துக்கொள்வது என்பது, நிறைவேற்றத்தக்கதாக அவர் துவங்கின வேலை அனைத்தையும் இரத்துச் செய்துவிடுவதாய் இருக்கும்; மேலும் மிகவும் விரும்பத்தக்க பரலோகச் சுபாவத்தை, அதாவது எதைக் குறித்து அவர் "பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவான் 17:5) என்று பேசினாரோ அந்தப் பரலோகச் சுபாவத்தை அவர் உதறிதள்ளினவராய் இருந்திருப்பார்; இப்படியாக அவர் தாம் விரும்புவதாகத் (யோவான் 17:5-இல்) தெரிவித்ததைப் புறக்கணித்தவராய் மாத்திரமல்லாமல், தெய்வீகத் திட்டத்தையும், ஒழுங்கையும் மற்றும் ஏற்பாட்டையும் புறக்கணித்துப் போட்டவராயும் இருந்திருப்பார், ஏனெனில் இயேசு இந்த உயர்வான சுபாவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதும், இன்னுமாக ஆதாமினால் பறிக்கொடுக்கப்பட்ட/இழந்துபோகப்பட்ட ஜீவனுக்கும், அதன் சகல பூமிக்குரிய சிலாக்கியங்களுக்குமான சரிநிகர் சமான விலையென அல்லது "மீட்கும்பொருளென," பூமிக்குரிய சுபாவத்தையும், அதன் சகல உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களை இயேசு அருளத்தக்கதாக, பூமிக்குரிய ஜீவனுக்கான, பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையினை உடையவராகவும்கூட அவர் காணப்பட வேண்டும் என்பதும் தேவனுடைய சித்தமாய்க் காணப்பட்டது.

## அதைப் பலி செலுத்திடுவதற்கு உடன்படிக்கைப் பண்ணினோருக்கு இப்பொழுது அவர் தமது புண்ணியத்தினைச் சாற்றுகின்றார்

உண்மையில் நமது கர்த்தர் இன்னமும் அனைவரையும் மீட்டுக்கொள்ளவில்லை, ஆனால் 1800-வருடங்களுக்கு முன்னதாகவே பலியை ஏறெடுக்கும் விதத்தில் அவர் தம்மைக் கொடுத்துவிட்டார். ஆனால் உலகம் அனைத்திற்குமான மீட்கும்பொருள் விலைக்கிரயமென, அவர் இன்னமும்

புண்ணியத்தினைப் applied/பயன்படுத்திடவில்லை. இவ்வளவு காலங்களாக அவர் அந்த மீட்கும்பொருள் விலைக்கிரயத்தினை வைத்து என்ன செய்துகொண்டிருக்கின்றார்? மீட்கும்பொருள் விலைக்கிரயமானது பிதாவினுடைய கரங்களில் வைக்கப்பட்டுள்ளது. இயேசு மரித்தபோது, "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார். கர்த்தர் இயேசுவாகிய மாபெரும் மேசியா ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கும் - ஆதாம் மற்றும் அவரது சந்ததியார் அனைவருக்கும் - கொடுத்துவிடுவதற்கு நோக்கம் கொண்டுள்ளதான அந்தக் காரியங்கள் அனைத்திற்குமான உரிமையினை உடையவராய் இருக்கின்றார். இவர்கள் அனைவரும், தேவனுடைய ஜனங்களாகிடுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்தருளுவார். இதற்கிடைப்பட்ட காலத்தில் அந்தப் புண்ணியத்தை வைத்துக்கொண்டு, அவர் என்ன செய்துகொண்டிருக்கின்றார்? ஆதாமின் சந்ததியார் மத்தியிலிருந்து யாரொருவர், கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர் தமது பூமிக்குரிய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டதுபோன்று ஒப்புக்கொடுத்திடும் நிபந்தனையின் கீழ்ப் பிதாவுடன் முழுமையான உறவிற்குள்ளாக வருவதற்கு வாஞ்சிக்கின்றாரோ, அப்படியான அந்தத் தனி நபர்களுக்கு கர்த்தர் அதைத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார். இப்படியாக தம்மிடத்தில் வரும் ஒவ்வொருவருக்கும், அவனவன் பலி செலுத்திடுவதற்குத் தன்னை அர்ப்பணிக்கும் தருணத்திலேயே, கர்த்தர் தம்முடைய புண்ணியத்தினைச் சாற்றுகின்றார் மற்றும் கர்த்தருடைய புண்ணியம் சாற்றப்படுதல் காரியமானது, அவனைப் பிதா ஏற்றுக்கொள்வதற்குத் தகுதிப்படுத்துகின்றது; அவர் அவனைப் புதுச்சிருஷ்டியென ஜெநிப்பிக்கின்றார். அதுமுதற்கொண்டு இத்தகையவர்கள் புதுச்சிருஷ்டிகளாக இருக்கின்றனர் மற்றும் இயேசுவின் ஜீவனானது, பலியில் கொடுக்கப்பட்டதுபோன்று, இவர்களது பூமிக்குரிய ஜீவனும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. இவர்கள் அனைவருக்கும், அதாவது கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டான புண்ணியத்தின் வாயிலாக, இந்த விசேஷித்த ஏற்பாட்டின்கீழ் இப்பொழுது அழைக்கப்படுபவர்களுக்கு அந்தப் புண்ணியம் சாற்றப்படுகின்றதே ஒழிய, அந்தப் புண்ணியம் இவர்களுக்கு வழங்கப்படுகிறதில்லை/கொடுக்கப்படுகிறதில்லை.

புண்ணியம் சாற்றப்படுகிறதற்கும்/தரிப்பிக்கப்படுகிறதற்கும் மற்றும் புண்ணியம் வழங்கப்படுகிறதற்கும்/கொடுக்கப்படுகிறதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. உதாரணத்திற்கு, ஒருவேளை உங்கள் கரங்களில் நாங்கள் 100 டாலர் கொடுத்தோம் என்றால், நாங்கள் உங்களுக்கு இப்படி நேரடியாய்க் கொடுத்ததன் வாயிலாக, 100 டாலர் வழங்கியிருக்கின்றோம் என்று அர்த்தப்படும். ஆனால் ஒருவேளை உங்களுக்குக் காசோலையில் 100 டாலர் எழுதிச் சம்மதக் கையெழுத்திடுகிறோம் என்றால், நாங்கள் உங்களை 100 டாலர் உரியவராக்குகின்றோம்/உங்களுக்கு 100 டாலரைச் சாற்றுகின்றோம். சபையின் விஷயத்தில் தரிப்பித்தலே/சாற்றுதலே நடக்கின்றது; இவர்களுக்குப் புண்ணியமானது நிஜமாக கடந்துவருகிறதில்லை. ஆதாம் ஆரம்பத்தில் பெற்றிருந்ததும் மற்றும் அவரால் இழந்துபோகப்பட்டதுமான, மனுஷீக ஜீவனுக்கும், மனுஷீக சிலாக்கியங்களுக்குமான உரிமையினைத்தான், நமது கர்த்தர் மனுக்குலத்திற்கு கொடுக்கவிருக்கின்றார். மனுஷீக ஜீவனுக்கான அந்த உரிமையினை நமது கர்த்தர் மனுக்குலத்திற்குக் கொடுத்துவிட வேண்டியவையாகும், ஆனால் அவர் இப்பொழுது அதைக் கொடுத்து விடுவதில்லை. மனுக்குலத்தாரிடத்தில் அதனை ஏற்றகாலத்தில் கொடுக்கத்தக்கதாக, அதனை வைத்திருக்கின்றார். அவர் அந்தப் புண்ணியத்தினை இப்பொழுது நமக்குச் சாற்ற மாத்திரமே செய்கின்றார் அல்லது பரம பிதாவுடன் நாம் இத்தகைய ஒப்பந்தத்திற்குள் பிரவேசிக்க விரும்பும் பட்சத்தில், பிதாவுடனான நம்முடைய ஒப்பந்தத்திற்குக் கையெழுத்திடுவதைக் குறிக்கும் விதத்தில் சாற்றுகின்றார்.

## உலகமானது, அவர்களுக்காக விலைக்கொடுத்து வாங்கப்பட்டதான பூமிக்குரிய ஜீவ-உரிமைகளைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும்

உலகத்திற்காக அந்தப் புண்ணியமானது கொடுக்கப்படப் போகின்றது என்ற கருத்திற்கு மீண்டும் வருகையில், அது சம்பந்தமாகத் தெளிவாகச் சொல்ல வேண்டுமெனில் . . . அந்தப் புண்ணியமானது **முழு உலகத்திற்கும்** கொடுக்கப்படப்போவதில்லை; மாறாக வேதவாக்கியங்கள் சொல்வதுபோன்று "எல்லா ஜனங்களுக்கேயாகும்." "**எல்லா ஜனங்கள்**" என்பதானது, முழு

உலகத்தையும் குறிப்பதில்லை, மாறாக மாபெரும் மத்தியஸ்தரின் இராஜ்யத்தினுடைய காலப்பகுதியின்போது, தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள்ளாகக் கடந்துவரப்போகிற அனைவரையும் குறிக்கின்றது. இந்த ஜனங்களுக்கு மாத்திரமே புண்ணியமானது applied/பயன்படுத்தப்படும். இந்த வாய்ப்பினைப் புறந்தள்ளி, இந்த ஜனங்களில் ஒருவராகிடுவதற்கு மறுத்திடும் யார் ஒருவரும், அருளப்படவிருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் புறந்தள்ளுகிறவராய் இருந்து, மனுஷீக ஜீவனுக்குரிய சீர்ப்பொருந்துதலை அடையாமல் போய்விடுவர். இத்தகையவர்கள் பூரணப்படுத்தப்படுவதில்லை. இத்தகையவர்கள் மனுஷீக உரிமைகளைப் பெற்றுக்கொள்வதேயில்லை. இத்தகையவர்கள் மரணத்திலிருந்து விழித்துக்கொள்வார்கள், ஆனால் இந்த விழித்துக்கொள்ளுதல் என்பது சீர்ப்பொருந்துதல் ஆகாது. இது வெறும் முதலாம் படியேயாகும்; இதிலிருந்தே அவர்கள் விரும்பும் பட்சத்தில் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களுக்கு நேராய் வழிநடத்தக்கூடிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுக்கமுடியும். மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை - மகா மத்தியஸ்தரை, மகா தீர்க்கத்தரிசியை, ஆசாரியனை மற்றும் இராஜாவை - இயேசுவைத் தலையாகவும், இந்தச் சுவிசேஷ யுகத்தின் சபையை அவரது அங்கத்தினர்களாகவும் பெற்றிருக்கும் தீர்க்கத்தரிசியை - உங்களுக்கு "உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றார்" (அப்போஸ்தலர் 3:22, 23).

இக்காரியம், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்;" என்ற வேதவாக்கியத்திற்கு இசைவாக உள்ளது (1 யோவான் 5:12; யோவான் 3:36). அவன் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டான்; அவன் சத்திய அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டுள்ளான்; இஸ்ரயேல் வாயிலாக அனைவருக்குமே கடந்துவருகின்றதான புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கடுத்த ஏற்பாடுகளின்கீழ் வரும் சிலாக்கியத்தினை அடையும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளான். ஆனால் ஒருவேளை அந்த வாய்ப்பினை அவன் பயன்படுத்திடுவதற்கும், தேவனுடைய ஜனங்களில் ஒருவராகிடுவதற்கும் தவறுவானாகில், அவர் கோபத்திற்கு நீங்கலாகவே மாட்டான். அவன் ஆயிரவருட யுகத்தின் முடிவைக் காணாமலும் - சீர்ப்பொருத்தப்பட்ட ஜனங்களில் ஒருவராகிடாமலும் - தேவனுடைய கோபத்தின்கீழ் மரித்துப்போய்விடுவான்.

---

**R5085**

# கிறிஸ்துவினுடைய பலி

யோர்தானில் நமது கர்த்தர், மரணபரியந்தம் தம்மை அர்ப்பணம் பண்ணினார். அதாவது அவர் ஞானஸ்நானம், முழுகுதல் பெற்றுக்கொண்டார். அவர்: "இதுமுதற்கொண்டு நான் என் சித்தம் செய்வதில்லை. பிதாவே உம்முடைய சித்தம் எதுவோ, அதுவே என்னுடைய சித்தமாக இருக்கும். நான் செய்யும்படிக்கு நீர் விரும்பும் எதையும் நான் செய்திடுவேன் - திவ்விய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில், செய்யும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகிறவைகளைச் செய்யத் தவறுவது பாவமாய் இருக்கும் என்பதினால், அக்காரியங்களைச் செய்வது மாத்திரமல்லாமல், புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும் நான் செய்திடுவேன். நான் என் ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டேன். நான் உமது சித்தத்தைக் கண்டுகொள்ளவும், அதைச் செய்யவும்தக்கதாக நீர் உம்முடைய வழிநடத்துதல்கள் மற்றும் உம்முடைய வார்த்தைகள் வாயிலாக என்னை நடத்தியருளும்" என்றார். இது அவர் ஏதோ உலகத்திடம் (உலகத்தின் கைகளில்) ஜீவனைக்கொடுத்துவிடுகிற காரியமாய் இருக்கவில்லை; ஏனெனில் அவர் தம்மையே தேவனுக்குக் கொடுக்கின்றவராய்க் காணப்படுகின்றார். அவர் மரணத்தைச் சந்திப்பதற்கும் மற்றும் தம் ஜீவனைக் கொடுப்பதும்தான் பிதாவின் சித்தமாக இருக்கும்

பட்சத்தில் ஜீவனைக்கொடுத்துவிடுவதற்கும் அவர் தேவனுக்குத் தம்மை அர்ப்பணம் பண்ணினபோது, ஆயத்தமாகவே காணப்பட்டார். சங்கீதம் 40:7, 8; எபிரெயர் 10:7.

அவரது அர்ப்பணத்தைத் தொடர்ந்து, அவர் தமது ஊழியத்தினைத் துவங்கினார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தில் அவர் மேன்மேலும் முன்னேறுகையில், அவர் புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருந்த அனைத்திற்கும் தம்மை ஒப்புக்கொடுத்தவரானார். அவரது இருதயத்தின் வார்த்தைகளானது: "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" (எபிரெயர் 10:7) மற்றும் தம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்த விஷயத்தில், பின்வருமாறு லூக்கா 6:18-19 - ஆம் வசனத்தில் - "அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து, ஆரோக்கியமடைந்தார்கள். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியாலே, பாலஸ்தீனியா மற்றும் சுற்றிலும் உள்ள திரளான ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்" என்று சொல்லப்படுமளவுக்கு அவர் தமது ஆற்றலையும், பலத்தையும் கொடுத்தவரானார். அவர் தமது பெலனைத் திரும்பவும் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக, எதையும் தமக்கென்று அவர் வைத்துக்கொள்ளவில்லை, மாறாக பிதாவின் சித்தம் இன்னது என்று தாம் புரிந்திருப்பவைகளுக்குக் கீழ்ப்படிகிறதில், தமது ஜீவனைத் தினந்தோறும் கொடுத்துவந்தவராய்க் காணப்பட்டார்; ஆகையால் தேவனுக்குப் பிரியமானவைகளை அவர் செய்துகொண்டிருந்தார் - அதாவது அவர் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்பினவைகள் யாவற்றையும், நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கின்றவற்றையும்கூட அவர் செய்து கொண்டு வந்தவராய் இருந்தார்.

## முடிந்தது

சிலுவையில் நமது கர்த்தர் "முடிந்தது!" என்று சத்தமிட்டுக் கூறினார். அவர் "தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றிவிட்டார்;" அவர் "தம்முடைய ஆத்துமாவைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுத்துவிட்டார்" (யோவான் 19:30; ஏசாயா 53:12, 10); பிதாவின் ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில், தம்முடைய ஜீவன் தம்மிடமிருந்து எடுக்கப்படுவதற்கு அவர் அனுமதித்தார். இக்காரியங்கள் அனைத்தும், நிழலில் முன்னரே சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரு குறிப்பிட்ட மாதத்தில், பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட வேண்டும். நியாயப்பிரமாணத்தில் - நேரடியான கட்டளையாகவோ அல்லது நிழலாகவோ காணப்படுபவைகளில் அடங்கும் அனைத்தும் தேவனுடைய சித்தமாக இருக்கின்றது என்று நமது கர்த்தர் அடையாளம் கண்டுகொண்டார். ஏதோ தமக்கு விருப்பமற்றிருக்கும் காரியங்களை மனுஷர்கள் தமக்கு நடப்பித்ததுபோன்று, மனுஷர்கள் தம்மிடமிருந்து, தம்முடைய ஜீவனை எடுத்துக்கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்தார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" (சங்கீதம் 40:8) என்று அவர் உண்மையாகவே சொல்லியிருந்தார் மற்றும் அவர் தேவனுடைய சித்தத்திற்குத் தம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்திருந்தபடியால், அவர்கள் அவரைக் கொலைசெய்யும்படிக்கு அவர் அவர்களை அனுமதித்தார்.

தம்முடைய ஜீவனானது அநீதியான விதத்தில் எடுக்கப்படுகின்றது என்று நமது கர்த்தர் உணர்ந்துகொண்டார். அவர் எதிர்க்கவில்லை; மாறாக இது நடைபெறும்படிக்கு அனுமதித்தார். தாம் எதிர்த்துப் போராடுவதில்லை என்றும், எவற்றையெல்லாம் தாம் நிறைவேற்றும்படிக்குப் பிதாவால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தாரோ, அவற்றையெல்லாம் தாம் செய்வார் என்றும் அவர் ஒப்பந்தம் பண்ணியிருந்தார். அவர் ஒருதரம் அர்ப்பணம் பண்ணின பிற்பாடு, அதிலிருந்து அவரால் பின்வாங்கிடக்கூடுமோ? இல்லை; ஏனெனில் பிதாவின் சித்தமெனத் தெய்வீக வழிநடத்துதலானது சுட்டிக்காட்டிடும் எதற்கும் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்திட, அவர் உடன்படிக்கைப் பண்ணியிருக்கின்றார். அவர் ஓர் உறுதியான ஒப்பந்தத்திற்குள் பிரவேசித்திருக்கின்றார் மற்றும் இதன் கீழ் அவர் தேவனுடைய சித்தத்திற்கு உண்மையாய்க் காணப்படும்படிக்குத் தம்மைக் கடமைக்குட்படுத்தியிருக்கின்றார் மற்றும் இந்த உண்மையுள்ள கீழ்ப்படிதலின் காரணமாக, திவ்விய

சுபாவத்திற்கு உயர்த்திடும் மகா மேன்மையான மகா பலனை நமது கர்த்தருக்குத் தேவன் கொடுப்பாரென, தேவனும் தம்மைக் கடமைக்குட்படுத்தியிருக்கின்றார். அந்த ஒப்பந்தத்திற்கான வாக்குறுதியெனப் பரிசுத்த ஆவியினைத் தேவன் அவருக்குக் கொடுத்திருந்தார்.

## மனுஷீக ஜீவ- உரிமைகள் நமது கர்த்தருக்குச் சொந்தமானவை

ஒன்றைக்கொடுத்து இன்னொன்றை மாற்றிக்கொள்வது (exchange) என்பதற்கும் மற்றும் வெகுமானம் அருளுதல் (reward) என்பதற்கும் இடையே மிகுந்த வித்தியாசம் காணப்படுகின்றது. Exchange என்பது சம மதிப்புள்ள ஏதோ ஒன்றிற்காக, சம மதிப்புள்ள ஏதோ ஒன்றை விட்டுக்கொடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. Reward என்பது தகுதியின் பொருட்டு ஏதோ ஒன்று அருளப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; அருளும் விஷயத்தில் Reward என்ற வார்த்தையானது எந்தக் கடமையையும் சுட்டிக்காட்டுகிறதில்லை. வெகுமானம்/reward அருளுபவர், தனது சுயாதீனத்தின்படி முற்றிலும் செயல்படுபவராய் இருப்பார்.

பிதாவிற்கும், நமது கர்த்தருக்கும் இடையிலாகப் பண்ணப்பட்ட ஏற்பாட்டில், பூமிக்குரிய ஜீவனுக்கான நமது கர்த்தருடைய உரிமையானது சம்பந்தப்படுகிறதில்லை; ஏனெனில் மனிதனாக அவருக்கு இருக்கும் ஜீவனுக்கு மாற்றாக (exchange), ஜீவனுக்கான உயர் தளத்தில், அவருக்கு ஜீவன் கொடுப்பதாகப் பிதா ஒப்பந்தம் பண்ணிடவில்லை. ஒருவேளை இப்படியாகத்தான் காரியம் இருந்திருக்குமானால், மனுஷ ஜாதியில் எவருக்கேனும் - சபைக்கோ அல்லது மனுக்குலத்தின் உலகத்திற்கோ - கொடுத்திடுவதற்கு அவர் எதையும் பெற்றிராதவராய் இருந்திருப்பார்.

மாறாக தமது குமாரனுடைய மரணபரியந்தமான கீழ்ப்படிதலுக்காய், தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும் மற்றும் அதிகாரங்களுக்கும் மேலாக அவரை உயர்த்துவதன் வாயிலாக, நமது கர்த்தருக்குப் பிதா பலனளிக்கவிருந்தார். பூமிக்குரிய ஜீவ-உரிமைகளானது, இன்னமும் நமது கர்த்தருக்கு உரியவையே. அவர் மனுஷீக ஜீவனை மனுக்குலத்திற்குக் கொடுக்கப்போகின்றார் என்ற உண்மையானது, அந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை அவர் பெற்றிருக்கின்றார் என்பதற்குச் சான்றுபகர்கின்றது.

நமது கர்த்தர் இயேசு வெறுமனே தம்முடைய ஜீவனை ஒப்படைத்துவிட ஒப்புக்கொண்டார் என்று நாம் புரிந்துகொள்கிறதில்லை. யேகோவா தேவன் மீதான அவரது அன்பும், யேகோவா தேவனிடத்திலான அவரது நம்பிக்கையும் மிகவும் அதிகமாய் இருந்தபடியால், மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்கான பிதாவின் திட்டத்தை நடந்தேற்றுவதில், தாம் என்ன விலை கொடுக்க வேண்டியிருப்பினும், அத்திட்டத்தை நடந்தேற்றுவதில் அவர் ஆவலாய் இருந்தார். அர்ப்பணிப்பின்போது அவரது நிலைப்பாட்டினை, "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்" என்ற வேதவாக்கிய வார்த்தைகளானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த வலியுறுத்தலானது, எந்தமட்டிலுமான தேவசித்தத்தை உள்ளடக்கினது? "புஸ்தகச் சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிற" ......புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருக்கும் அனைத்தையும் செய்யும்படிக்கு நான் ஆயத்தமாய் வருகிறேன் என்றார். தேவனுடைய பிரமாணத்தினைத் தம்முடைய இருதயத்தில் எழுதப்பெற்றவராக மாத்திரம் அவர் வராமல், இன்னுமாகப் புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும் செய்யும்படிக்கு அவர் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார்.

புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டவைகளை இயேசுவினால் எப்படி அறிந்துகொள்ள முடியும்? அவர் தம்மை அர்ப்பணம் பண்ணின தருணத்தின்போது, புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டிருப்பவைகள் அனைத்தையும் அவர் அறிந்திருக்கவில்லை என்று நாம் தாராளமாய் நம்பலாம். புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டிருப்பவைகள், பழைய ஏற்பாட்டினுடைய நிழல்களிலும், அடையாளங்களிலும் எழுதப்பட்டிருப்பவைகள், யூதர்களால் மாத்திரமே புரிந்துகொள்ளப்பட்டவையாகும். இவைகளில் அநேகவற்றை, சந்தேகத்திற்கிடமின்றி நமது கர்த்தர் தம்முடைய ஞானஸ்நானத்திற்கு முன்பு முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிழல்களில், தேவனுடைய சித்தமானது தெரிவிக்கப்பட்டுள்ளது. "புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும்" என்று நமது கர்த்தர் கூறியிருக்கின்றார். ஆனால் அத்தருணத்தின்போது, எவ்வளவு காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்று அவர் அறிந்திருந்தார் என யாரால் சொல்லக்கூடும்? அவரது

ஞானஸ்நானத்திற்கு முன்புவரை - அதாவது ஞானஸ்நானத்தின்போது, மேலான காரியங்கள் அவருக்குத் திறக்கப்பட்டு, அவருக்குத் தெரியப்படுத்தப்படுவதற்கு முன்புவரை - அவர் அறியாதவராய் இருந்தார்; இந்தப் பிரகாசிப்பித்தலைத் தொடர்ந்து, அவர் கற்றுக்கொள்வதற்கும், அவைகளைத் தியானிப்பதற்கும் வேண்டி வனாந்தரத்திற்குப் போனார்.

## தேவனுடைய சித்தத்திற்குத் தவிர மற்றப்படி அனைத்திற்கும் மரித்திருந்தார்

தம்மைக்குறித்துப் புஸ்தகச்சுருளில் எழுதப்பட்டிருப்பவைகள் அனைத்தையும் குறித்து இயேசு தம்முடைய அர்ப்பணிப்பிற்கு முன்னதாக அறியவில்லை என்றபோதிலும், அவரது அர்ப்பணம் முழுமையானதாகவே காணப்பட்டது. தேவனுடைய சித்தத்தைச் செய்யத்தக்கதாக, அவர் தமது முழு ஜீவியத்தையும் சமர்ப்பித்திருந்தார். அவரது சொந்த சித்தமானது மரித்துப்போயிருந்தது. பிற்பாடு, ஒரு குற்றவாளியெனத் தாம் உண்மையில் மரிப்பதையும் தமது உடன்படிக்கையானது குறிக்கின்றது என்று உணர்ந்துகொண்டார்.

இயேசுவின் மனுஷீக ஜீவ-உரிமைகளானது, மரணத்தில் இழக்கப்படவில்லை என்ற உண்மையின் காரணமாக அல்லது "சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக" அவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்ற உண்மையின் காரணமாக, அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அவர் மனுஷீக ஜீவ-உரிமைகளைப் பெற்றிருந்தாரா? என்று கேள்வி கேட்கப்படுகின்றது. (எபிரெயர் 1:2).

இதுவும் மற்ற அநேகம் பாடப்பொருள்களைப்போன்று, வெவ்வேறு சிந்தனைகள் மற்றும் கருத்துகள் கொடுக்கப்படுவதற்கு ஏதுவானவையாகும். மனுஷீக ஜீவனுக்கான மற்றும் சகல பூமிக்குரிய காரியங்களுக்கான உரிமையினை நமது கர்த்தர் உடையவராய்க் காணப்பட்டார். இந்த ஜீவன் மற்றும் அதன் சகல ஆசீர்வாதங்களுக்கான இந்த உரிமையினை, ஆதாம் கீழ்ப்படியாமையின் காரணமாக இழந்துபோயிருந்தார்; ஆனால் கீழ்ப்படிதலின் காரணமாக இயேசு அதைப் பாதுகாத்துக்கொண்டார் மற்றும் இழந்துபோகும் அபாயம் முற்றிலும் அற்ற நிலையில் அதை வைத்திருந்தார். ஆகையால் ஒருவேளை யாரேனும் நியாயப்பிரமாணத்திற்கு எதிராக, அவரது உரிமைகளிடமிருந்து அவரை அறுப்புண்டுபோகப் பண்ணினாலும், இந்த அறுப்புண்டுபோகப் பண்ணுதலானது, அவருக்கு இருந்த உரிமைகள் எதையும் இழந்துபோய்விடச் செய்யவில்லை.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், சட்டப்பூர்வமாக நமது கர்த்தரிடமிருந்து அவரது ஜீவ-உரிமைகளை எப்படி ஒருவரால் பறிமுதல் செய்திட முடியும் என்று எங்களால் காணமுடியவில்லை. எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி, விழுந்துபோன மனுஷர்கள் அடங்கின மதவெறி கொண்ட ஒரு கூட்டத்தாரினால் இயேசுவானவர், அவரது ஜீவனிடமிருந்தும், அது சம்பந்தப்பட்ட உரிமைகள் அனைத்திடமிருந்தும் துண்டிக்கப்பட்டார்; ஆனால் அவர்களது செயல்பாடுகளானது, அவருக்குத் தேவனுடைய நியாயப்பிரமாணமானது அருளின எந்த உரிமைகளையும் அழித்துப்போட முடியவில்லை. ஆகையால், தேவன் அவரை மரணத்திலிருந்து உயிர்த்தெழப்பண்ணி, மேலான சுபாவத்தையும், அது தொடர்புடைய அருமையான குறிப்பிட்ட ஆசீர்வாதங்களையும் அவருக்கு வெகுமானமாக அருளின போது, இந்த உயர்த்தப்படுதலானது, அவருக்குத் தேவனுடைய நியாயப்பிரமாணம் கொடுத்திட்டதும், அவரால் இழந்து போகப்படாததும் அல்லது பறிக்கொடுக்கப்படாததுமான அந்த உரிமைகள் விஷயத்தில் தலையிடுகிறதில்லை. அவருக்குச் சொந்தமான ஜீவனை அவரிடமிருந்து எடுக்கத்தக்கதாக அவர் மனுஷர்களுக்கு அனுமதி மாத்திரம் வழங்கினார். இப்படியாக அவருடையதாகக் காணப்படும் அவருடைய உரிமைகளிடமிருந்து அவர் **பிரிக்கப்பட்டார்.**

## எப்படி நமது கர்த்தர் மனுக்குலத்தின் தந்தையானார்?

இப்படியாக நமது கர்த்தர் அந்த உரிமைகளை இழந்துபோகாதவராகவும், அதைப் பறிக்கொடுக்காதவராகவும் காணப்படுவதினால், மரணம் வரையிலுமான இவரது கீழ்ப்படிதலின் காரணமாக, இவரைத் தேவன் உயர்வாய் உயர்த்தினபோது, அப்போது அவர் சொந்தமாய்ப் பெற்றிருந்தவைகள் மத்தியில், மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையும் அடங்கியிருந்தது. பிதா

அவருக்கு மற்றவையெல்லாம் அருளியிருந்தபோதிலும், அந்த உரிமை அவருக்கு இன்னமும் சொந்தமானதேயாகும். மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையினை அவர் சொத்தாக - அதாவது ஏதோ பெற்றுக்கொண்ட அன்பளிப்பாக இல்லாமல், சட்டப்பூர்வமாகத் தம்முடையதாக வைத்திருப்பதின் காரணமாகவே, அவர் "ஜீவனளிப்பவராக" கூறப்படுகின்றார்.

ஆயிரவருட யுகத்தின்போது, திவ்விய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக, நமது கர்த்தர் மனுக்குலத்திற்குப் பூரண மனுஷீக சுபாவத்திற்கு நேரான திரும்புதலை அருளுவார். இதைச் செய்கையில், பிதா தமக்குக் கொடுத்த ஏதோ ஒன்றினை அவர் கொடுப்பவராய் இராமல், மாறாக அவர் ஒரு விசேஷித்த விதத்தில், தம்முடைய சொந்த நாமத்திலேயே செயல்படுபவராய்க் காணப்படுவார். நித்திய ஜீவனுக்கான இந்த உரிமையினை அவர் ஒருவேளை பெற்றிருக்கவில்லையெனில், அவரை "ஜீவனளிப்பவர்" என்று கூறிடமுடியாது. ஆனால் மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையினை அவர் பெற்றிருக்கின்றபடியால், அவர் தம்முடைய ஆயிரவருட ஆளுகையின்போது, அதைக் கொடுத்துவிடுவார்.

ஆயிர வருடங்கள் முடிந்த பிற்பாடு, நமது கர்த்தர் ஜீவனளிப்பவராகக் காணப்படுவதில்லை. அவர் தூதர்களுக்கோ, மனுக்குலமல்லாதவர்களுக்கோ ஜீவனளிப்பவராகக் காணப்பட முடியாது; ஏனெனில் அவரது உரிமையானது, பூரண மனித ஜீவிக்கான உரிமையாக மாத்திரம் காணப்பட்டது; பொதுவான மனுக்குலத்திற்கு அவர் கொடுக்க விரும்புபவைகளைத்தான் இப்போது சபைக்குச் impute/சாற்றுகின்றார் - அதாவது அவரோடுகூடப் பலியின் வேலையிலும், எதிர்க்காலத்தில் அவரது மகிமையான வேலையிலும் பங்கடையத்தக்கதாக நம்மை அனுமதிக்கத்தக்கதாக நமக்குச் சாற்றுகின்றார் அல்லது கடனாய்க் கொடுக்கின்றார்.

## மனுஷீக ஜீவனுக்கான உரிமையானது, மனுக்குலத்திற்கான நமது கர்த்தருடைய தனிப்பட்ட அன்பளிப்பாகும்

நியாயப்பிரமாணத்திற்குத் தாம் கீழ்ப்படிந்ததன் காரணமாய் (ஏற்கெனவே) தமக்குரியதாகின, தம்முடைய பூமிக்குரிய சுபாவம் மற்றும் பூமிக்குரிய ஜீவ-உரிமைகள் விஷயத்தில் எப்படிச் "சர்வத்துக்கும் சுதந்தரவாளியென" நமது கர்த்தர் ஏதேனும் கூடுதலான அதிகாரத்தை அடைய முடியும் என்று எங்களால் காண இயலவில்லை. சர்வத்துக்கும் சுதந்தரவாளியென அவர் நித்திய காலமும் பிதாவின் பிரதிநிதியாய் இருப்பார். அவர் உன்னதமானவருடைய வலது பாரிசத்தின் இடத்தை எடுத்துக்கொள்வார். ஏற்றகாலத்தில் முழங்கால் யாவும் அவருக்கு முடங்கிடும் மற்றும் தூதர்களும்கூட அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள்.

இவைகள் அனைத்தும் பிதா வாக்களித்த வெகுமானத்தின் ஒரு பாகமென நமது கர்த்தருக்குக் கடந்துவந்ததாய் இருக்கின்றது. ஆனால் ஆதாமினால் தொலைத்துப்போடப்பட்ட அனைத்தையும் திரும்பக்கொடுத்தல் எனும் இந்த ஒரு குறிப்பிட்ட அம்சமானது, அவரது பெரும் தியாகத்தினால், அவரால் சம்பாதிக்கப்பட்டு, மனுக்குலத்திற்குக் கடந்துவரும் அவரது சொந்த அன்பளிப்பாய்க் காணப்படுகின்றது; அதாவது அவர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனைக் கொடுத்து வைத்துவிட்டபோது, இதன் அடிப்படையிலேயே புதிய சுபாவத்தையும் மற்றும் மனுக்குலத்தின் சார்பாக திரும்பக்கொடுத்தலில், பயன்படுத்தப்படப்போகும் அந்தப் பூமிக்குரிய ஜீவனை ஆளும் உரிமையையும் அவர் பெற்றுக்கொண்டார் என்று சொல்லலாம்.

ஒருவேளை அவர் ஏற்கெனவே அந்த ஜீவனைப் பிரயோகித்திருப்பாரானால் மற்றும் உண்மையிலேயே அதைக் கைநெகிழவிட்டிருப்பாரானால், அவரால் மனுக்குலத்திற்கு எப்படி விசேஷமாக எதையேனும் நிறைவேற்றிட முடியும் என்று எங்களால் காணமுடியவில்லை. ஆனால் கொடுப்பதற்கென்று அவர் பூமிக்குரிய உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் எனும் இச்சொத்தினைப் பெற்றிருக்கின்றபடியால், ஆயிரவருட ஆளுகையின்போது கொடுத்துவிடும் வேலை நடைபெறும்; மேலும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாக தாம் பெற்றுக்கொண்டது எதுவோ அதையே அவர் கொடுத்துவிடுபவராய் இருப்பார் (லேவியராகமம் 18:5).

## பலி என்ற வார்த்தைக்குக் காணப்படும் வேதவாக்கிய பயன்பாட்டின்படியான அர்த்தம்

"பலி" என்ற வார்த்தையானது பல்வேறு கோணங்களில் பயன்படுத்தப்படலாம். ஒரு விலங்கானது ஏதோ ஓர் இரக்கமான காரணத்திற்காக அல்லது நோக்கத்திற்காகக் கொல்லப்பட்டால், அதுவும் அது குறிப்பாக ஒருவேளை திவ்விய ஏற்பாட்டிற்கு இசைவாக நடைபெற்றதாக இருக்கும்பட்சத்தில், அது பலி என்று சொல்லப்படலாம். ஆனால் வெறுமனே ஒரு விலங்கு கொல்லப்படுவது என்பது பலியாகாது. பலியாக்கப்படாமலேயே ஒரு நாயானது கொல்லப்படலாம். ஆனால் ஒருவேளை அறிவியல் சோதனை ஒன்றிற்காக நாயினுடைய ஜீவனானது கையளிக்கப்படுகிறதென்றால், அறிவியலுக்காக அது பலி செலுத்தப்பட்டுள்ளது என்று நாம் சொல்லலாம். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, நாம் பலியின் காரியத்தினை கண்ணோக்க வேண்டும். அர்ப்பணிக்கப்பட்டுள்ள தேவனுடைய ஜனங்களின் ஜீவியங்களானது ஒரு நோக்கத்திற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

நம்முடைய அர்ப்பணிப்பின்போது, நமது சரீரங்களை நாம் ஜீவனுள்ள பலிகளாக ஒப்புக்கொடுக்கின்றோம். நம்முடைய ஜீவியங்களை, நம்முடைய மனித சரீரங்களை மற்றும் நமக்குரிய அனைத்தையும் நாம் கர்த்தருக்குக் கொடுக்கின்றோம். எனினும் இந்தப் பலியானது சில **விசேஷித்த விதத்தில்** மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படத் தேவன் விடுகிறதில்லை. சிலர் கர்த்தருடைய சத்தியத்திற்கு ஊழியம்புரிவதில் தங்கள் ஜீவியங்களைச் செலவழிப்பதுண்டு மற்றும் அவர்கள் ஏதோ தொழு மரத்தில் மரித்ததற்கு ஒப்பாகப் பலியானதாகவும் சொல்லப்படலாம். "என் ஜீவியம் முழுவதும் உமது கரத்தில் இருக்கின்றது; உமக்குப் பிரியமானபடி, அதைப் பயன்படுத்திடும்" என்று நாம் கர்த்தரிடத்தில் சொல்லுகின்றோம். அது சந்தோஷம் அல்லது வலி நிறைந்ததாகவும், தியாகமாக/பலியாக அல்லது இன்பம் நிறைந்ததாகவும் இருப்பினும், இது விஷயத்தில் எங்கள் சொந்த சித்தங்களை நாங்கள் கையளித்துவிட்டு, "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்" (யோவான் 6:38) என்று சொன்ன இயேசுவைப் போன்று ஆகுகின்றோம்.

## நாம் எதைப் பலிசெலுத்துகின்றோம்?

இயேசுவின் பலியானது யோர்தானில் ஏறெடுக்கப்பட்டது. ஆனால் அது கல்வாரியில் நிறைவடைந்தது. அவரது அர்ப்பணிப்பானது முழுமையானதாய் இருந்தது. காளை கொல்லப்படுகிற காரியமானது, இயேசு தம்முடைய சித்தத்தைக் கையளித்தப்போது அவர் செய்ததை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அதுபோலவே நம் விஷயத்திலும் காணப்படும். அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகையில், நாம் நமது சித்தங்களைப் பலி செலுத்துகிற விதத்தில் மரித்தவர்களாகுகின்றோம். ஆனால் பலி செலுத்தப்பட்ட அந்தச் சித்தத்தைக் கர்த்தர் எந்த விதத்தில் ஏற்றுக்கொள்ளப்போகின்றார் என்பது அவருடைய காரியமாய் இருக்கின்றது. நாம் அதை - அதாவது நம்மிடத்தில் கிறிஸ்துவின் சிந்தையானது சம்பூரணமாய் வாசம் செய்யத்தக்கதாக, நாம் அதைக் கையளித்துவிடுகின்றோம்.

நம்முடைய சித்தங்களைக் கையளித்துவிடுவது என்பது இறுதியில் நம்முடைய ஜீவியங்களையும் நாம் கையளித்துவிடுவதற்கு நம்மை நடத்திடும் என்பதை நாம் அறிந்திருந்தபோதிலும், நம்முடைய சொந்த சித்தங்களுக்கடுத்த உரிமைகளை நாம் என்றென்றுமாக விட்டுப் பிரிந்துவிடுகின்றோம்; எனினும் நம்முடைய ஜீவனைப் பலியிடும் வேலையை நாம் செய்கிறதில்லை. நம்முடைய சொந்த உரிமைகளை விட்டுப்பிரியும் விஷயத்தில் நாம் எதையும் செய்கிறதில்லை. இயேசு நமக்காகப் பரிந்துபேசுகிறவராகும்போது, அவர் நம்மைப் பொறுப்பேற்றுக்கொள்கின்றார். நம்முடைய சித்தங்களை நாம் கையளித்தது முதற்கொண்டு, நம்முடைய சரீரங்களானது, அவரது சரீரமாகக் கருதப்படுகின்றது. இவ்விஷயத்தில் நாம் நமது சித்தங்களைக் கையளிக்க மாத்திரம் செய்து, அனைத்தையும் அவர்

செய்யத்தக்கதாக, விட்டுவிடுகின்றோம். அவர் பலியிடும் வேலையைப் பார்த்துக்கொள்கின்றார்; ஏனெனில் அவரே பிரதான ஆசாரியனாய் இருக்கின்றாரே ஒழிய, நாமல்ல.

இதுபோலவே மாபெரும் பலனானது, கர்த்தருடைய கரங்களிலேயே காணப்படுகின்றது. சுவிசேஷ யுகத்தின் போது, அவர் தம்முடைய புண்ணியத்தினை (merit) சபைக்குத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார். பலியிடும் வேலையினை அவர் நிறைவேற்றி முடிக்கையில், தம்முடையதென்று அவர் அழைத்திடும் இந்த மாபெரும் பலியின் புண்ணியத்தினை - உலகத்திற்கான புதிய உடன்படிக்கையினை முத்திரிக்கத்தக்கதாகப் பயன்படுத்துவார். ஆனால் பலியிடும் பணியில், நாம் செய்வதற்கொன்றுமில்லை. அவை அனைத்தையும், நமக்காகப் பரிந்துபேசுபவரிடத்தில் நாம் விட்டுவிடுகின்றோம்.

புதிய சிருஷ்டிதான் சரீரத்திற்கு எஜமானாக அல்லது அதிகாரியாக நிச்சயமாகக் காணப்படுகின்றது மற்றும் இப்படியாகத்தான் கர்த்தரும் ஏற்பாடு பண்ணியுள்ளார். புதுச்சிருஷ்டிகளென நம்முடைய சரீரத்தை வைத்து நிறைவேற்றும்படிக்கு நாம் ஒரு வேலையைப் பெற்றிருக்கின்றோம். நமது கர்த்தர் நம்மை, அவரது ஊழியக்காரர்களென ஏற்றுக்கொள்ளும்போது, நாம் அவரது உக்கிராணக்காரர்களென நம்முடைய தாலந்துகள் அனைத்தையும் பயன்படுத்திட வேண்டும். இந்த விதத்திலேயே சரீரமானது மரணம் வரையிலும் புதுச்சிருஷ்டியினுடைய கட்டுபாட்டின் கீழ்க் காணப்படும்.

## ஜீவ - உரிமைகள் சபைக்குச் சாற்ற மாத்திரமே படுகின்றது

நமது கர்த்தருடைய நிலைமையிலிருந்து நம்முடைய நிலைமையானது வேறுபடுகின்றது. முதலாவதாக நம்மிடத்தில் பூமிக்குரிய ஜீவ-உரிமைகள் ஏதும் இல்லை; ஆகையால் give away/கொடுத்துவிடுவதற்கென்று நாம் எதையும் பெற்றிருக்கவில்லை. நாம் அதை ஆதாமினுடைய பாவத்தின் காரணமாக இழந்திருக்கின்றோம். ஆனால் ஒருவேளை நாம் கர்த்தருடைய சீஷர்களாகுவோமானால், அனைத்தையும் அவரிடத்திற்குக் கையளித்துவிட்டு, அவர் நமக்குச் சாற்றிடுவதற்கு விருப்பமாய் இருக்கின்ற புண்ணியத்தினை ஏற்றுக்கொள்வோமானால், நமக்கான மகா பரிந்துபேசுபவர் நம்மை அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனக் கருதி, அவரது பாடுகளில் பங்கெடுப்பதற்கு நம்மை அனுமதிப்பார். அவர் தம்முடைய புண்ணியத்தினை நமக்குச் சாற்றும்போது, அனைத்து உரிமைகளும் கடந்துவந்தது. தமது அங்கங்களுக்குரியதான உரிமைகளையும், அவர்களுக்கு வரும் பூமிக்குரிய உரிமைக்கடுத்த சிலாக்கியங்களையும், அவர்களுக்கு அவர் கொடுக்கின்றார்.

உலகத்திற்கென்று எதிர்க்காலத்தில் இந்த உரிமைகளை நமது கர்த்தர் பயன்படுத்துவதற்கான அவசியம் ஏற்படுகையில், அப்படிச் செய்ய அவர் முற்றிலும் ஆற்றலுடையவராகவும் மற்றும் வல்லமையுடையவராகவும் காணப்படுவார். அவர் திவ்விய பிரமாணத்தினை ஒருபோதும் மீறாததினால், தமது பூமிக்குரிய உரிமைகளைப் பயன்படுத்துவதற்கும், அது தொடர்பாகக் கட்டளையிடுவதற்கும் அவர் முழு உரிமையுடையவராய் இருப்பார்; இந்தத் தமது பூமிக்குரிய உரிமைகளை அவர் forfeited/பறிக்கொடுக்கவில்லை/ இழந்துபோகவில்லை, மாறாக மனுக்குலத்தினுடைய எதிர்க்கால ஜீவன் தொடர்புடைய விஷயத்தில், மனுக்குலத்தின் தந்தையெனத் தாம் அழைக்கப்படத்தக்கதாக, உலகத்திற்கு ஜீவன் கொடுப்பதற்கு வேண்டி தாம் இந்த உரிமைகளை மறுபடியுமாகப் பயன்படுத்திட வேண்டும் என்ற புரிந்துகொள்ளுதலில், அந்த உரிமைகளை அவர் laid down/கொடுத்து வைத்துவிட்டார்.

தம்மையே பலிசெலுத்தும்படியாகக் கிறிஸ்து வந்ததாக வேதவாக்கியங்களில் எங்குமே சொல்லப்படவில்லை. அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாக வந்தார் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. பிதா அவருக்கென்று ஆயத்தம் பண்ணி ஊற்றின "பாத்திரத்தில்" பானம்பண்ணுவதற்கு அவர் மறுப்புத் தெரிவித்திடாமல், அடிமண்டி மட்டும் அதைப் பருகினார். அந்த ஜீவன் கொஞ்ச காலம் அல்லது நீண்ட காலம் காணப்படுவது பிதாவின் விருப்பமாக இருப்பினும், எப்படி இருப்பினும் - மரணபரியந்தமுமான அந்தச் சித்தத்திற்கான அவரது கீழ்ப்படிதலுக்காய், அவர் பலனைப் பெற்றுக்கொண்டார். அவர் அனைத்தையும் பிதாவின் கரங்களில் கொடுத்துவிட்டார். இது ஒரு

பலியாகும்; ஏனெனில் அவரது ஜீவனைப் பயன்படுத்துவதற்கான உரிமை அவரிடத்தில் காணப்பட்டது. ஆனால் அவரது பிதாவின் சித்தத்திற்கான அவரது கீழ்ப்படிதலானது, பலிக்கு நேராய் வழிநடத்தினதாய் இருக்கின்றது; இதற்கே அவர் பலனைப் பெற்றுக்கொண்டார்.

---

**R5621 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]**

# நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ-உரிமைகளின் சாற்றப்படுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல்

"எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" எனும் வார்த்தைகள் குறிப்பதென்ன என்பதைப் புரிந்துகொள்வதில் தேவனுடைய ஜனங்களில் அநேகருக்குச் சிரமம் இருப்பதாகத் தெரிகின்றது. ஆதாமுக்கும், அவரது சந்ததிக்குமான மீட்கும்பொருளெனத் தமது மனுஷீக ஜீவனை நமது கர்த்தர் இயேசு கொடுத்துவிட்டாரென்றால், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன், நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்" என்று நாம் வாசிக்கிறபடி, அவரது கிருபையினை ஏற்றுக்கொள்பவர்களை நீதிமானாக்குகையில் மனுஷீக ஜீவனுக்கான உரிமைகளைக் கொடுக்கத்தக்கதாக, எப்படி அவர் இப்பொழுது அவ்வுரிமைகள் எதையேனும் பெற்றவராய் இருக்கமுடியும்? என்று கேள்வி கேட்கின்றனர் (யோவான் 3:36).

இந்தக் கேள்விக்கான பதிலைப் புரிந்துகொள்வதற்கு, மீட்கும்பொருள் கொடுக்கப்படுகிற காரியத்திற்குப் பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். முதலாவதாக நமது கர்த்தரால் அவரது முப்பதாம் வயதின்போது தண்ணீர் ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்ட அவரது அர்ப்பணமானது, தேவனுக்கு அவரது ஜீவனை அவர் ஒப்புக்கொடுப்பதை, கையளிப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அவர் ஒப்புக்கொடுத்த ஜீவனானது, பூரண மனுஷீக ஜீவனாக இருந்தது மற்றும் இதற்கான முழு உரிமையையும் உடையவராய் அவர் இருந்தார். அவர் "பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" இருந்தார் என்று பரிசுத்த பவுல் அடிகளார் நமக்குத் தெரிவிக்கின்றார் (எபிரெயர் 7:26). நமது கர்த்தர் நேரடியான விதத்தில் - அதாவது ஒரு மனித தகப்பனிடமிருந்து தமது ஜீவனைப் பெறும் நேரடியான விதத்தில் - ஆதாமின் சந்ததியினரிலுள்ள ஓர் அங்கத்தினனல்ல; ஆகையால் அவரது ஜீவனானது, மீதமுள்ள உலகத்தாருக்கு இருப்பது போன்று ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஜீவனாக இருக்கவில்லை. இதற்குமேல் எதுவும் அவசியப்படாது. ஆதாமின் ஜீவனுக்கும், பூரணத்திற்கும் முழுக்க சமமானதை, கர்த்தர் ஒப்புக்கொடுத்துவிட்டார். ஆனால் அவர் தம்முடைய ஜீவனை ஆதாமின் கரங்களில் ஒப்புக்கொடுக்கவில்லை; அதை வேறு யாருக்கும் கொடுத்திடாமல், அவர் அதைப் பிதாவின் கரங்களில் மாத்திரமே கொடுத்திட்டார்.

நம்முடைய மீட்பர், அவரது மூன்றரை வருட ஊழியங்களின்போது, தம்முடைய ஜீவனைக் கொடுத்துக்கொண்டு வந்தார். அந்த வேலையைக் கல்வாரியில் "முடிந்தது" என்று கூறி நிறைவேற்றி முடித்தார். அவர் அங்கு மரணத்திற்குள்ளான தம்முடைய ஸ்நானத்தினை நிறைவேற்றி முடித்தார்; அவர் முடிவுபரியந்தம் தம்முடைய சுயத்தை ஒப்புக்கொடுத்துக்கொண்டு வந்தார். ஆனாலும் அந்த மனுஷீக ஜீவனை ஆதாமிற்கும், அவரது சந்ததியாருக்கும் அவர் இன்னமும் பயன்படுத்திடவில்லை. அவர் அதைப் பிதாவினுடைய கரங்களின் வசத்தில் கொடுத்து மாத்திரம் வைத்துள்ளார். அது பறிக்கொடுக்கப்படாத ஜீவனாகும்; அது எங்கும் அடமானம் வைக்கப்படாத ஜீவனாகும்; அது பறிமுதல்செய்யப்படாத ஜீவனாகும். அவர் பிதாவினுடைய திட்டத்திற்கு இசைவாக, தம்முடைய ஜீவனை ஒப்படைக்க மாத்திரமே செய்தார் (லூக்கா 23:46).

## இரண்டு தளங்களில் ஜீவனுக்கான உரிமைகள்

பிதா அவரை மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பின போது, அவர் இயேசுவை ஓர் ஆவிக்குரிய ஜீவியாக்கினார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் (1 பேதுரு 3:18). அவரிடமிருந்து அவரது பூமிக்குரிய ஜீவன் எடுக்கப்பட அவர் அனுமதித்ததில் காட்டின அவரது கீழ்ப்படிதலுக்கான வெகுமானமாக அவர் புதிய சுபாவத்தில் உயிர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய ஜீவனைப் பெற்றுக்கொண்டார். ஆனால் அவர் பூமிக்குரிய ஜீவனுக்கான தம்முடைய உரிமையினை இழந்துபோய்விடவில்லை/பறிக்கொடுத்திடவில்லை; ஆகையால் ஒரு புதுச்சிருஷ்டியான அவர், பூரண மனுஷீக ஜீவனுக்கான இந்த உரிமையினைத் தொடர்ந்து உடையவராய்க் காணப்பட்டார். பூரண ஜீவனுக்குரிய அனைத்தும் அவருக்கு உரியதாய் இருந்தது. தம்முடைய ஜீவனை எடுத்துப்போடுவதற்கு அவர் யூதர்களை அனுமதித்தார், ஆனாலும் ஒருபோதும் ஜீவனுக்கான தமது உரிமையினை அவர் துறந்திடவுமில்லை, இழந்துபோய்விடவுமில்லை. ஆகையால் அவர் பிதாவினால் ஜீவனுக்கு உயிர்த்தெழுப்பப்பட்டபோது, அவர் ஆவிக்குரிய சுபாவத்திற்கான உரிமையினை மாத்திரமல்லாமல், பூமிக்குரிய சுபாவத்திற்கான உரிமையையும்கூட உடையவராய் இருந்தார்; ஆனால் இந்தப் பூமிக்குரிய சுபாவத்தினைத் தமக்கென்று அவர் பயன்படுத்தப்போகிறதில்லை; ஏனெனில் திவ்விய சுபாவத்தையுடைய யார் ஒருவரும் பூமிக்குரிய சுபாவத்தினைப் பயன்படுத்துவதுமில்லை, அதற்காக விருப்பம் கொள்வதுமில்லை. ஆதாமுக்கும், அவரது சந்ததியாருக்கும் இலவசமாய் மனுஷீக ஜீவனைக் கொடுப்பதற்கான, அருளுவதற்கான உரிமையே அவரது உரிமையாய் இருந்தது மற்றும் இந்த நோக்கத்தினை அவர் உலகத்திற்கு வந்தபோது, மனதில் கொண்டவராய் இருந்தார்.

ஆகையால் கர்த்தராகிய இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து, நாற்பது நாட்கள் கழித்து, உன்னதத்திற்கு ஏறிப்போனபோது, அவர் பெற்றிருந்த உரிமைகள் அனைத்தையும் உடையவராகவே இருந்தார். மனுஷீக ஜீவனுக்கான உரிமையினை ஒருபோதும் அவர் பறிக்கொடுக்காததால், அந்த உரிமை அவரிடத்தில் இருந்தது; தம்முடைய கீழ்ப்படிதலுக்கு வெகுமானமாகக் கிடைத்த திவ்விய சுபாவத்தையும்கூட - ஒரு மேலான உரிமையையும்கூட, ஒரு மேலான சுபாவத்தையும்கூட - அவர் உடையவராய் இருந்தார். ஆனால் அவர் உன்னதத்திற்கு ஏறினபோது, அவர் தம்முடைய பலியின் புண்ணியத்தினை மனுக்குலத்தின் உலகத்திற்காகப் பயன்படுத்திடவில்லை; ஒருவேளை பயன்படுத்தியிருந்தால் ஒட்டுமொத்த உலகமானது பொல்லாங்கனுக்குள் இப்பொழுது வீழ்ந்து கிடக்காது (1 யோவான் 5:19). ஒருவேளை நம்முடைய மீட்பர் பரத்திற்கேறினபோது, தம்முடைய புண்ணியத்தினைப் பயன்படுத்தியிருப்பாரானால், அது உலகத்தினுடைய பாவங்களை நிவர்த்திச் செய்திருந்திருக்கும்; ஆனால் அவர் இதைச் செய்யவில்லை. சபை மாத்திரமே உலகத்தின் மீதுள்ள ஆக்கினைத் தீர்ப்பினின்று தப்பித்துள்ளது என்று வேதவாக்கியங்களானது நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது (உரோமர் 8:1). இன்னமும் உலகமானது பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளவர்களே, இந்த ஆக்கினையினின்று தப்பித்துக்கொண்ட ஒரே ஜனங்களாகக் காணப்படுகின்றனர். வேறு யாருமல்ல, அர்ப்பணிக்கப்பட்ட வகுப்பார் மாத்திரம் கிறிஸ்துவிடமிருந்து புண்ணியத்தினையும், நீதிமானாக்கப்படுதலையும் பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கின்றனர்.

## சபைக்குத் திரும்பக்கொடுத்தலின் காரியங்கள் சாற்றப்படுகின்றது

அப்படியானால் எப்படி நமது கர்த்தர் சபைக்கு அப்புண்ணியத்தினைப் பயன்படுத்திடுவார்? நேரடியாக இல்லை என்று நாம் பதிலளிக்கின்றோம். ஒருவேளை அவர் தமது புண்ணியத்தினை நேரடியாய்ச் செயல்படுத்திடுவாரானால், அது சபைக்கு மனுஷீக ஜீவனை, மனுஷீக பூரணத்தைக் கொடுத்துவிடும். தேவன் சபைக்குச் சில மேலானவைகளை வைத்திருக்கின்றார் - அதாவது இயேசு அடைந்திட்டதான அதே திவ்விய சுபாவத்தினைச் சபை அடைய வேண்டும் என்று தேவன் திட்டம் பண்ணியுள்ளார். இதனை சபை இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலம் அடைந்திடும். இது குறிப்பது என்னவெனில் . . . பிதாவின் சித்தத்திற்குக் கர்த்தர் தம்முடைய மனுஷீக ஜீவனைப் பலிசெலுத்தி, தம்முடைய பூமிக்குரிய உரிமைகளைக் கொடுத்தது போன்று, அவரோடுகூடப் பங்கடைய வேண்டுமெனில், அவரது மணவாட்டி வகுப்பாரில் அங்கத்தினர்களாகும் அனைவரும்கூட

இப்படியாகவே செய்திட வேண்டும். அவரோடுகூட நாம் பாடுபட்டால் மாத்திரமே, அவரோடுகூட நாம் ஆளுகை செய்ய முடியும் (2 தீமோத்தேயு 2:11, 12) என்பதேயாகும்.

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24). பின்னர் "நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் சீஷனும் இருப்பான்" (யோவான் 12:26). இப்படியாக யாரெல்லாம் இந்தச் சுவிசேஷ யுகத்தில் செய்வார்களோ, அவர்கள் அதே திவ்விய சுபாவத்தையும், அதே மகிமையையும், அதே அழியாமைமையையும் அடைவார்கள் - ஆனால் வித்தியாசம் என்னவெனில் நமது கர்த்தர் எப்போதுமே அவர்கள் அனைவருக்கும் தலையாக இருப்பார்; தம்முடைய சரீரமாகிய சபையின் மீது பிரதானமானவராய் இருப்பார் மற்றும் அவர்கள் எப்போதும் அவரது அங்கத்தினர்களென, மகிமையில் காணப்படும் சபையாக இருப்பார்கள்.

இயேசு பரிசுத்தமானவராகவும், மாசில்லாதவராகவும் காணப்படுவது அவசியமாய் இருந்ததானால், சபை சீரழிந்த மனித சுபாவத்தில் காணப்படுகையில், சபை எப்படிப் பிதாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாகிட முடியும்? என்ற அடுத்த கேள்வி எழும்புகின்றது. இயேசுவின் சீஷர்களாகும் இந்த வகுப்பாருடைய குறைவுகளையும், பூரணமின்மைகளையும் மூடப்படத்தக்கதாக, அவர் தம்முடைய பலியின் புண்ணியத்தினை இவர்களுக்குத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார் என்று வேதாகமம் பதிலளிக்கின்றதாய் இருக்கின்றது. Give/**கொடுப்பதற்கும்**, impute/**சாற்றுவதற்கும்** இடையிலுள்ள வித்தியாசத்தினை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர் எதிர்க்காலத்தில் தம்முடைய புண்ணியத்தினை உலகத்திற்குக் கொடுத்திடுவார். ஆனால் இப்பொழுதோ அவர் அதைச் சபைக்குச் சாற்றுகின்றார்.

சாற்றப்படுதல் என்று சொல்லுகையில், ஒருவேளை சபையானது பூமிக்குரிய சுபாவத்திலேயே, உலகத்தாரைப்போன்று இருந்துவிட்டால், அவர்களும் போகப்போக உலகத்தைப் போன்று, சீர்க்கெட்ட நிலைமையினின்று மனித பூரணத்திற்கு வந்திடுவதற்கான உரிமையினை உடையவர்களாய் இருப்பார்கள். இயேசு தம்முடைய மரணத்தின் வாயிலாக சபைக்கும், மீதமுள்ள ஆதாமின் சந்ததிக்கும் அந்த உரிமைகள் யாவற்றையும் கொடுத்திடும் சிலாக்கியத்தினைப் பெற்றுக்கொண்டவரானார். ஆனால் இந்த வகுப்பார், அதாவது சபை மனித பூரணத்திற்கான அந்த உரிமைகள் அனைத்தையும் துறந்துவிடுகின்றனர். நாம் நம்மையே தேவனுக்கு அர்ப்பணிக்கையில், பூமியின் மற்றும் பூமிக்குரிய காரியங்களின் சுதந்தரவாளிகளாகுவதற்கான நம்முடைய உரிமைகளை நாம் துறந்துவிட்டோம்; அதாவது அவற்றைக் கையளித்துவிடும் விதத்தில் மாத்திரமே நாம் துறந்துவிடுகின்றோம். விசுவாசத்தில், இயேசு ஏற்றகாலத்தில் மனுக்குலத்தின் ஒட்டுமொத்த உலகத்திற்கும் உரியதான திரும்பக்கொடுத்தலின் அதே ஆசீர்வாதங்களை நமக்கும் கொடுத்திருந்திருப்பார் என்று நாம் நம்புகின்றோம். விசுவாசத்தினாலே அந்த ஆசீர்வாதங்களை நாம் ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தினாலே அவற்றைக் கையளித்தும் விடுகின்றோம். சபை செய்ய வேண்டிய மீதிக் காரியம், அவர்கள் தங்கள் பூமிக்குரிய ஜீவியங்களைக் கையளிப்பதேயாகும். சிலருக்கு மிகுதியான பெலன் காணப்படலாம் மற்றும் சிலருக்குக் கொஞ்சம் பெலன் காணப்படலாம்; சிலருக்குத் தாலந்துகள் அதிகமாய்க் காணப்படலாம் மற்றும் சிலருக்குக் கொஞ்சமாகக் காணப்படலாம்; சிலருக்கு ஜீவியக் காலம் அதிகமாய் இருக்கலாம் மற்றும் சிலருக்குக் கொஞ்சமாக இருக்கலாம்; எப்படியிருப்பினும், ஒவ்வொருவரும் பெற்றிருக்கும் எக்காரியமும் கையளிக்கப்பட வேண்டும், ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

ஆகையால் அர்ப்பணிப்பின்போது, சபை வகுப்பார் தங்களது பூமிக்குரிய சுபாவத்தினை மனமுவந்து கையளித்து விடுபவர்களாகக் காணப்படுகின்றனர். தற்காலத்தில் தங்களுக்குரியதான பூமிக்குரிய உரிமைகள் அனைத்தையும் மற்றும் ஒருவேளை அவர்கள் உலகத்தோடு தொடர்ந்து காணப்பட்டிருந்தார்களானால், அவர்களுக்கு உரியதாய் இருந்திருக்கும் அந்த உரிமைகளையும்கூடச் சேர்த்து அவர்கள் கையளித்துவிடுகின்றனர். இயேசு தற்காலத்தில் சபைக்கு மீட்கும்பொருள் - பலியில் எதையும் கொடுக்கிறதில்லை, மாறாக அவர்கள் ஒருவேளை உலகத்தில் ஒரு சாராராய் இருந்திருந்தார்களானால், அவர்கள் பெற்றிருக்க வாய்ப்புள்ளதை, அவர்களுக்குச் சாற்ற மாத்திரமே செய்கின்றார்.

இயேசு மரித்தபோது, அவர் ஆதாமிற்காக ஒரு மீட்கும்பொருளினை (pay) **விலையாகச் செலுத்தித் தீர்க்கவில்லை.** இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டபோதும் அவர் மீட்கும்பொருளினை (paid) **விலையாகச் செலுத்தித் தீர்க்கவில்லை**; மேலும் அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்ற போதும்கூட அவர் உலகத்திற்காக மீட்கும்பொருளை (pay) **விலையாகச் செலுத்தித் தீர்க்கவில்லை.** அவர் தம்முடைய பலியின் புண்ணியத்தினைப் பிதாவின் கரங்களில் (laid) **கொடுத்து** வைத்தார். இந்தப் புண்ணியத்தினைச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் சபைக்கு மாத்திரமே அவர் **சாற்றிக்கொண்டிருந்திருக்கின்றார்**; ஆனால் இப்பொழுதோ சபைக்குச் சாற்றும் காரியத்தினை அவர் முடிக்கவிருக்கின்றார் மற்றும் திரும்பக்கொடுத்தலை உலகத்திற்குக் கொடுத்திடும் வேலை துவங்க இருக்கின்றது; மற்றும் அது துவங்குவதற்கு முன்னதாக, சபைக்குச் சாற்றப்பட்ட (கடனாகக் கொடுக்கப்பட்ட) புண்ணியமானது, மனிதனுக்கான திரும்பக்கொடுத்தலுக்கு அடிப்படையாகத் **திவ்விய நீதிக்கு நிஜமாய் (paid over) விலையாகச் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.**

## சுவிசேஷ யுகத்தின் வேலை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

யூத பாவநிவாரண நாளில் பிரதான ஆசாரியனால் முதலாவதாக காளை கொல்லப்படுகின்றது. அந்தக் காளை பூரண மனுஷனாகிய நமது கர்த்தர் இயேசுவையும், ஆசாரியன் புதுச்சிருஷ்டியாகிய நமது கர்த்தர் இயேசுவையும் குறிக்கிறது. இப்படியாக இவர் நிழலில் மனுஷீக சுபாவத்தின் அர்ப்பணத்தை அடையாளப்படுத்திக் காண்பிக்கின்றார்; மேலும் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற ஆசாரியனால் மாம்ச சரீரத்தில் காணப்படும் புதுச்சிருஷ்டியின் நிலைமையும் அடையாளப்படுத்தப்படுகின்றது.

நமது கர்த்தர் தமது மூன்றரை வருட ஊழியக்காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தின் இந்த நிலைமையில்தான் இருந்தார். அந்தக் காலத்தில் பொன் தூபபீடம் மற்றும் (தேவனுடைய சத்திய வெளிச்சத்தினைக் குறிக்கும்) பொன் குத்துவிளக்கின் வெளிச்சம் என்ற சிலாக்கியங்களையும் மற்றும் (ஆவிக்குரிய உணவாகிய) சமூகத்து அப்பத்தின் ஆசீர்வாதங்களையும் அவர் பெற்றிருந்தார். மூன்றரை வருடகால முடிவில், தம்மைப் பலியாகக் கொடுக்கிற வேலையை நிறைவேற்றி, உண்மையான தூபத்தை எரித்து, இரண்டாவது திரையைக் கடந்து சென்றார்.

மூன்றாம் நாளில் நமது கர்த்தர் இரண்டாம் திரைக்கு அப்பால் - ஆவிக்குரிய தளத்தில் - புதுச்சிருஷ்டியாக முற்றிலும் பூரணராக - மனிதன் என்ற வார்த்தைக்கே சம்பந்தம் இல்லாதவராக எழுந்திருந்தார். அவரால் காற்றுபோன்று வந்துபோய் இருக்க முடியும். பல்வேறு தோற்றங்களில் தோன்றி, இங்கேயும் அங்கேயும் காற்றைப்போலப் போய்வந்து, தாம் இனி ஒரு மனிதனல்ல என்பதை தம் சீஷர்கள் நம்பச் செய்திட்டார். பிறகு அவர் உன்னதத்திற்கு ஏறும்போது மகாபெரிய பிரதான ஆசாரியனாக இரத்தத்துடன் சென்றார். இரத்தமானது பலியின் ஜீவனைக் குறிப்பிடுகின்றது. தேவனுடைய சந்நிதானத்திலே அவர் தோன்றி கிருபாசனத்தில் இரத்தத்தைத் தெளித்தார். கிருபாசனத்தில் இரத்தத்தைத் தெளித்தது, ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு பாவநிவர்த்தி செய்வதற்காகும். இந்தப் பாவநிவர்த்தி செய்யப்பட்டது ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் மாத்திரமே, உலகத்தாருக்கல்ல என்று நாம் காண்கின்றோம் (லேவியராகமம் 16:6).

பிரதான ஆசாரியன் ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் பாவநிவர்த்தி செய்த பிறகு பிரகாரத்திற்குச் சென்று வேறு வேலையில் ஈடுபட்டார். நமது கர்த்தர் பரமேறினதற்கும், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கியதற்கும் இடைப்பட்ட பத்து நாட்களில் அவர் நிஜமான ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் இரத்தத்தைப் பிரயோகித்தார். தம் புண்ணியத்தைச் சபைக்குப் பிரயோகித்தார். நாம் இதை அறிவோம்; பாவத்திற்கான இப்பரிகாரத்தினால் இதைத் தொடர்ந்து பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட காரியமானது, அவர்களுக்கு தெய்வீகக் கிருபை கடந்து வந்துள்ளதை ரூபகாரப்படுத்திற்று (எபிரெயர் 9:24).

நிழலில் ஆசாரியன் காளையின் பலியை ஏறெடுத்த பிறகு, கர்த்தரின் ஆட்டை கொல்லுகிற வேலையைத் தொடர்கின்றார். காளையைக்காட்டிலும் ஆடு வலுக்குறைந்தது. காளை நமது கர்த்தருக்கு அடையாளமாயிருக்கின்றது. கர்த்தருடைய ஆடு, அவரது சரீரமாகிய சபையின் உண்மையுள்ள அங்கங்களை அடையாளப்படுத்துகின்றது. சபையின் பலியை ஏறெடுப்பதே சுவிசேஷ

யுகத்தின் வேலையாக இருக்கின்றது. இவர்கள் தங்களைப் பலியாக ஏறெடுத்திட இயலாது; ஏனெனில் இவர்கள் சுபாவத்தின்படி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆதாமின் சந்ததியினராக இருப்பதினால் ஆசாரியராய்ச் செயல்படுவதற்குத் தகுதியற்றவர்களாயிருந்து, மகாபெரிய பிரதான ஆசாரியன் தம்முடைய புண்ணியத்தை இவர்களுக்குச் சாற்றிடும்வரை இவர்களால் ஆசாரியராகிட முடியாது. ஆகையால் காளையின் பலியை ஏறெடுத்ததுபோலவே, மகா பிரதான ஆசாரியன் ஆட்டின் பலியையும் ஏறெடுத்தார்.

அதன்பிறகு அதன் முடிவைப் பார்க்கிறோம். நிழலில் ஆட்டின் இரத்தம் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தெளிக்கப்படுகிறது; மற்றும் இது ஆசாரியருக்காகவோ லேவியருக்காகவோ அல்ல, ஜனங்களுக்காகத் தெளிக்கப்படுகிறது. காளையின் இரத்தம் ஆசாரியருக்காகவும், லேவியருக்காகவும் தெளிக்கப்படுகிறது; ஆட்டின் இரத்தம் ஜனங்களுக்காக தெளிக்கப்படுகிறது (லேவியராகமம் 16:6, 15). இந்த இரண்டு பலிகளும் சுவிசேஷ யுகத்தின் சகல பலிகளையும் அடையாளப்படுத்துகின்றது. கர்த்தராகிய இயேசுவின் பலி மேன்மையானது, இதற்கு அடுத்தபடியானது சபையின் பலியாகும்.

## மீட்கும்பொருள் வழங்கப்படுவதில் சபை பங்குவகிப்பதில்லை

முழு உலகத்தின் பாவத்திற்கும், நிஜமான காளையினுடைய பலியின் புண்ணியமானது போதுமானதாகும். ஆனால் சபையும் பலியில் பங்குபெற அனுமதிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய ஏற்பாடாக இருந்தது. பலியில் பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெறுகிறவர்கள் மாத்திரமே மகிமையிலும் பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள். தேவ நீதி திருப்தியடைவதற்கு சபையின் எந்தவொரு அங்கமும் மரிக்கவேண்டிய அவசியமில்லை; ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமையில் பங்குபெற அது அவசியமாக இருந்தது. நமது கர்த்தரின் பலி நமது பாவங்களுக்காகவும், நமது பலி நாம் அவரது மகிமையில் பங்குபெறுவதற்காகவும் அவசியமாயிருந்தது. அவர் பலியானார்; அது நமது பலியல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவதுபோல நமது சரீரங்களை நாம் அர்ப்பணிக்க மாத்திரமே செய்கிறோம் (ரோமர் 12:1). தேவன் நமது பலியைக் கிறிஸ்து மூலமாக ஏற்றுக்கொள்வதில்லை; நேசக் குமாரனுக்குள் மாத்திரமே நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் (எபேசியர் 1:3-6) எனவே நமது ஆண்டவர் நம்மை ஏற்றுக்கொண்டதினிமித்தமாகவே நாம் அவரது பலியிலும், மகிமையிலும் பங்குபெறும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

ஆகையால் நமது கர்த்தரிடம் இன்னமும் கொடுக்கப்படாத/பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள மனுஷீக ஜீவன் ஒன்று காணப்படுகின்றது. அவர் சபைக்கு மனுஷீக ஜீவனைக் கொடுக்கிறதில்லை. அவர் தாம் பெற்றிருக்கும் மனுஷீக ஜீவனுக்கான உரிமையின் ஒரு பாகத்தைக்கூடப் பங்குபோடுவதில்லை. கர்த்தருக்குப் பூமிக்குரிய சரீரம் அவசியமில்லை; அவரது சபைக்கும் பூமிக்குரிய சரீரங்கள் அவசியப்படுவதில்லை. பூமிக்குரிய உரிமைகளைக்கொண்டு இயேசுவுக்கு என்ன பயன் இருக்கிறது அல்லது நாம் அவற்றைக்கொண்டு என்ன செய்யப்போகின்றோம்? மறுபடியுமாக மனிதர்களாகிடுவதற்கு நாம் ஒருபோதும் நோக்கம்கொண்டிருக்கிறதில்லை; கர்த்தரும் மறுபடியுமாக மனிதனாகிட நோக்கம் கொண்டிருக்கவில்லை. நம்மை ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான பலிகளாக்கிடும் நோக்கத்திற்காக மாத்திரமே கிறிஸ்துவின் புண்ணியமானது நமக்குச் சாற்றப்படுகிறது; மேலும் சபையின் கடைசி அங்கத்தினன் மகிமையடைகையில், அந்தப் புண்ணியமானது மீண்டுமாகத் திரும்பிவிடுகின்றது. அப்போது மனுக்குலத்தின் உலகத்திற்கெனப் பயன்படுத்தத்தக்கதாகக் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம் முழுமையாய் ஆயத்தமாய்க் காணப்படும்; ஏனெனில் சபை அப்போது திவ்விய சுபாவமுடையவர்களாகி இருப்பதினால், அவர்கள் அதற்குமேல் ஆதாமின் சந்ததியராய் இருப்பதில்லை (2 பேதுரு 1:4).

அந்த வேலை, அதாவது இயேசுவின் புண்ணியத்தினை உலகத்தின் சார்பாய்ப் பயன்படுத்துவது என்பது, ஆயிரவருட யுகத்திற்குரியதாகும்; அப்போது மீட்பரின் இராஜ்யமானது, மனிதனுக்கான திரும்பக்கொடுத்தலை மெய்யான ஆசீர்வாதமாக்கிடும். ஆகையால் கிறிஸ்துவின் புண்ணியமானது உலகத்திற்காகத் திரும்பினவுடனே, அவர் தாம் விலைக்கொடுத்து வாங்கின தமது இந்தச்

சொத்தின்மீதான பொறுப்பினை உடனே எடுத்துக்கொள்வார். அவர் தமது மகா வல்லமையையும், ஆளுகையையும் திரும்பக் கையில் எடுத்துக்கொள்வார். பின்னர்த் தம்முடைய பலியின் புண்ணியத்தினை அவர் யாருக்குப் பயன்படுத்தவிருக்கின்றாரோ அந்த மீட்கப்பட்டவர்கள் அனைவருக்கும், நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ளதான திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைக் கொடுத்திடுவதற்கு அவர் ஆயத்தமாய்க் காணப்படுவார்.

தீர்க்கத்தரிசியாகிய தாவீது மூலம், யேகோவா தேவன் தம்முடைய குமாரனை நோக்கி: "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை (புறஜாதிகளை, ஜாதிகளை, ஜனங்களை) உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" என்று கூறியிருக்கின்றார் (சங்கீதம் 2:8). இது சமீபித்துள்ளது என்று நாம் நம்புகின்றோம். கர்த்தர் உலகத்திலிருந்து சம்பத்து வகுப்பாராகிய சபையைச் சீக்கிரம் எடுத்துக்கொள்ளவிருக்கின்றார். பிற்பாடு அவர் ஆதாமின் சந்ததிக்கு மனுஷீக சீர்ப்பொருந்துதலை அருளுவதும், ஒட்டுமொத்த உலகை, அவர்களது பூமியை ஏதேன் தோட்டத்தினுடைய சீருக்குக் கொண்டுவருவதும்தான் அவர் அருளப்போகும் ஆசீர்வாதங்களாய் இருக்கின்றன. இந்த வேலையினை அவர் தம்முடைய சரீரத்தோடு, தம்முடைய மணவாட்டியோடுகூடச் சேர்ந்து செய்வார்.

இந்த வேதவாக்கிய கண்ணோட்டத்தின்படி, இயேசு கொடுத்திடும் மீட்கும்பொருள் விலைக்கிரயமானது படிப்படியாய் நடைபெறும் காரியமாயிருக்கின்றது மற்றும் அது இன்னும் நிறைவடையவில்லை. அவர் மனிதனான போது, அதைக் கொடுக்கத் துவங்கினார்; அவர் தமது மூன்றரை வருட பூமிக்குரிய ஊழியத்தின்போது, அதைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டு வந்தார்; அவர் கொடுப்பதைக் கல்வாரியில் வைத்து நிறைவேற்றி முடித்தார். அதுமுதற்கொண்டு தாம் உரிமைப்பெற்றிருக்கிறவற்றை, சபைக்காக சாற்றுவதன் மூலம் பயன்படுத்திக்கொண்டு வருகின்றார். தமது பலியினுடைய இந்தப் புண்ணியம் அனைத்தையுமே, ஒட்டுமொத்த உலகத்தின் பாவத்தை நிவிர்த்திச் செய்யத்தக்கதாகப் பெற்றிருப்பார் - ஒரு நபர்கூடத் தவிர்க்கப்படுவதில்லை. தம்முடைய மரணத்தின் வாயிலாக அவர் பெற்றுக்கொண்டவைகளை, ஆயிர வருடங்களின்போது மனுக்குலத்திற்குக் கொடுத்திடுவார் மற்றும் புதிய உடன்படிக்கையினை முத்திரிப்பதன் மூலம், அதை அவர்களுக்குச் செயல்படுத்துவார். சபை நிறைவடைந்தவுடனே, சபை திரைக்கு அப்பால் கடந்துபோனவுடனே, புதிய உடன்படிக்கையானது முத்திரிக்கப்படும்.

## ஆவிக்குரிய சுபாவமும், பூமிக்குரிய சுபாவமும் ஒன்றல்ல

கிறிஸ்தவ ஜனங்களின் கண்ணோட்டங்களானது மிகவும் குழப்பமானவைகளாகக் காணப்படுகின்றன. உலகத்திற்கு வருவதற்கு முன்னதாக இயேசு ஓர் ஆவியின் ஜீவியாக இருந்தார் என்றும், மனிதனானபோது அவர் சுபாவ வகையான மாற்றத்தினை அடைந்தார் என்றும் இவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அவர் மனிதனாகிவிட்டப்படியால், அவர் சதாகாலமும் மனிதனாகவே - "தேவ தூதரிலும் சற்று சிறியவனான" - மனிதனாகவே காணப்பட வேண்டும் என்று வேதவாக்கியங்களுக்கு முரணாகவும், தவறுதலாகவும், முன்னுக்குப்பின் முரணாக எண்ணிக்கொள்கின்றவர்களாய் இவர்கள் காணப்படுகின்றனர். லோகோஸ் நித்தய காலத்திற்கென்று . . . "மாம்சமாக்கப்படாமல்" . . . "தம்மைத்தாமே தாழ்த்திக்கொள்ளாமல்" . . . மாறாக "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்க்கத்தக்கதாக" மாத்திரமே "மாம்சமாக்கப்பட்டார்" என்று நாம் நினைவில்கொள்ள வேண்டும் (எபிரெயர் 2:9).

சுபாவங்களில் வித்தியாசங்கள் காணப்படுகின்றதென வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றது. பரிசுத்த பவுல் அடிகளார் சுட்டிக்காட்டுவதுபோன்று, மனிதனுடைய மாம்சம் வேறே, விலங்குகளுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. இதுபோலவே, அதாவது பூமிக்குரிய தளத்தில் விலங்குகள், பறவைகள், மீன்கள் மற்றும் மனிதர்கள் இருப்பதுபோல ஆவிக்குரிய தளத்திலும் - தேவதூதர்கள், கேரூபின்கள், சேராபின்கள் காணப்படுகின்றனர் (1 கொரிந்தியர் 15:39-41; திருவிவிலியம்). பிதாவோடு தமக்கிருந்த மகிமையை விட்டுவந்ததாக நமது கர்த்தர் தெளிவாய்க் கூறியுள்ளார். அவர் தமது சீஷர்களை நோக்கி:

"மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" (யோவான் 6:62) என்று கூறியுள்ளார்.

"தாம் முன்னிருந்த இடத்திற்கு" எனும் வார்த்தைகளானது அவர் முன்பு பெற்றிருந்த சுபாவத்தில், நிலைமையில் ஒரு மாற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு இதற்கு முன்னதாக அநேகந்தரம் உலகத்திற்கு வந்திருக்கின்றார், ஆனால் அவர் அப்போதெல்லாம் மாம்சமானவராக்கப்படவில்லை. அநேகமாக இயேசுதான் ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய பிரதிநிதியாக ஆதாமிடம் பேசியிருந்திருக்க வேண்டும். நிச்சயமாகவே அவர்தான் பிதாவின் பிரதிநிதியென மோசேக்கு நியாயப்பிரமாணத்தினைக் கொடுத்தவராவார். கர்த்தரும், இரண்டு தூதர்களும் சோதோமுக்குச் செல்கையில், அவர்கள் காரியத்தைக்குறித்து ஆபிரகாமிடம் கூற வந்தபோது, இயேசுதான் ஆபிரகாமோடு பேசினவராவார். முதலில் வந்தவர்கள் ஆபிரகாமுக்கு மனிதர்களாகத் தோற்றமளித்தனர், மனிதர்கள் போன்று புசித்தனர், மனிதர்கள் போன்று பேசினார்கள்; ஆனால் பிற்பாடே அவர்கள் தூதர்கள் என்று அறிந்துகொண்டார். நமது கர்த்தர் மாம்சமானவராக்கப்பட்டபோது, இது அவர் பூமியில் காணப்பட்ட முதலாம் தருணமாய் இருக்கவில்லை. அவர் முந்தின தருணங்களில் வந்தபோதெல்லாம், பிதாவின் பிரதிநிதியென மனிதர்களோடு தொடர்புகொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களின்போது, மாம்ச சரீரத்தை எடுத்து மாத்திரம் கொள்கிற ஓர் ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார்.

மனித சரீரம் எடுக்கும் இதே வல்லமையானது மற்றத் தூதர்களினாலும் பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். உதாரணத்திற்கு நமது கர்த்தர் பரமேறின போது தேவதூதர்கள்: "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்போஸ்தலர் 1:11). விழுந்துபோன தூதர்களுக்கும் மனித சரீரம் எடுத்துக்கொள்ளும் வல்லமை முன்பு இருந்தது என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். இவர்கள் உடல் வேட்கையின் காரணங்களுக்கு மனிதர்களாகக் காணப்படுவதற்கும், பூமிக்குரிய தளத்தில், பூமிக்குரிய நிலைமையில் காணப்படுவதற்கும் விரும்பினார்கள் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இப்படியாக இவர்கள் தங்கள் வாசஸ்தலத்தை விட்டு, மனிதர்களாக ஜீவித்து, புதிய சந்ததி ஒன்றினைக் கொண்டுவர நாடினார்கள்.

## மிகவும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள ஒரு காரியம்

ஒருவேளை இயேசு தம்முடைய முதலாம் வருகையின்போது மனிதனாகத் தோற்றம் மாத்திரம் எடுத்துக்கொண்டு, மாம்சம் எனும் திரைக்குப் பின்னாக உண்மையில் ஓர் ஆவியின் ஜீவியாகத்தான் இருந்து வந்திருப்பாரானால் - "incarnate" - அவரால் மீட்பராய் இருந்திருக்கவே முடியாது. இயேசு மனிதனாகக் காணப்பட்டார் - "அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்றுதான் வேதவாக்கியங்கள் சொல்லுகின்றதே ஒழிய, அவர் மனிதனாகக் காணப்படுவது போன்று நடித்துக்கொண்டார் என்பதாகச் சொல்லுகிறதில்லை (யோவான் 1:14). மனிதனுக்கான மீட்பராகுவதற்கு, அவர் ஒரு மனிதனாகுவது அவசியமாயிருந்தது; அவர் மனிதன் போன்று நடிப்பவராக இருக்கமுடியாது. அவர் உண்மையிலேயே ஒரு மனிதனாகிட வேண்டும்; இல்லையேல் அவரால் ஆதாமிற்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகிட முடியாது; ஏனெனில் திவ்விய நியாயப்பிரமாணமானது "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்பட வேண்டும்" என்று முன்வைக்கின்றதாய் இருக்கின்றது (உபாகமம் 19:21).

மீட்கும்பொருள் (கிரேக்கில் - *antilutron*) எனும் வார்த்தையானது சரிநிகர் சமான விலையினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இயேசு உண்மையிலேயே பரலோக மகிமையினை விட்டுவந்தார் - விட்டுவந்தது போல் அவர் நடிக்கவில்லை. ஐசுவரியவானாய் இருந்த அவர், நம் பொருட்டுத் தரித்திரரானார்; ஆகையால் அவர் உண்மையிலேயே மனிதனாகத்தான்

காணப்பட்டார். அவர் தம்மை யோர்தானில் அர்ப்பணித்தபோது, அவர் பூரணமான மனிதனாகக் காணப்பட்டார் - ஆதாமிற்கான ஒரே சரிநிகர் சமான விலையாகக் காணப்பட்டார். மரிப்பதற்காய் "நீர் ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" என்று நமது கர்த்தர் பிதாவை நோக்கிக் கூறினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (எபிரெயர் 10:5). இந்தச் சரீரமானது ஒரு நோக்கத்திற்காக - அதாவது மரிப்பதற்காகத் தேவனால் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது; பரிசுத்த தேவதூதர்கள் முன்னிலையில் நித்திய காலமும் சிறுமைப்படுத்தப்பட்ட நிலையில் கர்த்தர் இயேசுவை வைப்பதற்கு என்று ஆயத்தம்பண்ணப்பட்ட சரீரம் என்று அநேகர் எண்ணிக்கொண்டிருப்பதுபோன்று இல்லை என்றுமுள்ள காரியங்களை நம்மில் அநேகர் கவனிக்கத் தவறிவிட்டோம்.

நமது கர்த்தர் (தாம் வாசம்பண்ணும்) தம்முடைய சூழ்நிலைகளுக்கு இசைவற்ற ஒரு சரீரத்திலும் மற்றும் ஒரு சுபாவத்திலும் மற்றும் இந்த ஒவ்வாத சுபாவத்தின் அசௌகரியங்களுடனும் பரலோகத்தில் வலம் வந்துகொண்டிருக்கிறதில்லை. அவர் ஏற்கெனவே பலியின் வேலையினை நிறைவேற்றிவிட்டார் மற்றும் அவரது பலியினுடைய புண்ணியமானது, தேவனுடைய கரங்களில் காணப்படுகின்றது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாக ஏறெடுக்கப்பட்டுள்ளதான பலியானது, தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது மற்றும் நீதியினுடைய புஸ்தகத்தில் நமது மீட்பருடைய கணக்கில், பூரண மனிதனாக அவர் பெற்றிருந்த பூமிக்குரிய ஜீவனுக்கான அந்த உரிமைகள் காணப்படுகின்றது.

ஆதியில் தகப்பனாகிய ஆதாமிற்கு மனுஷீக ஜீவனையும், மனுஷீக ஜீவ-உரிமைகளையும் தேவன் கொடுத்தபோது, அவர் உடனே பூமியின் மகா இராஜனானார். அதுபோலவே இயேசு மாம்ச மனுஷனான போது, அவர் இயல்பாகவே அதன் அதிகாரியானார். அவருக்கு மாத்திரமே பூமி உரியதாயிருந்தது; மேலும் பூரண மனிதனுக்குப் பூமியின்மீதும், அதன் நிறைவின் மீதும் உரிமையுண்டு. இந்த உரிமைகளைத் தமக்கென்று வைத்துக்கொண்டு, மகா பூமிக்குரிய அதிகாரியாகிடுவதற்குப் பதிலாக, இயேசு அந்தப் பூமிக்குரிய உரிமைகள் யாவற்றையும் ஒப்படைத்துவிட்டு, கீழ்ப்படிதலுக்கான பலனைப் பெற்றுக்கொண்டார் - பலிக்கான பலனையல்ல, கீழ்ப்படிதலுக்கான பலனைப் பெற்றுக்கொண்டார். அவர் இன்னமும் அந்த மனுஷீக ஜீவனுக்கான உரிமைகளை உடையவராய் இருக்கின்றார் மற்றும் தேவனுடன் இசைவிற்கு வந்து, கீழ்ப்படிதலின் உடன்படிக்கைக்குள் பிரவேசித்தல் எனும் நிபந்தனைகளின் கீழ் மனுக்குலத்தின் உலகிற்கு அந்த உரிமைகளைக் கொடுக்க இருக்கின்றார். ஏதேனில் தொலைந்துபோனதும், கல்வாரியில் மீட்கப்பட்டதுமான யாவற்றையும் திரும்பப்பெறுவதற்கு மனுக்குலத்தின் உலகத்தினைத் தம்முடைய இரத்தத்தின் வாயிலாக இயேசு தகுதியாக்கிடுவார்.

நமது கர்த்தர் அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு காட்சியளித்துத் தோன்றினது என்பது, அவரும் சரி, தேவதூதர்களும் சரி பல நூற்றாண்டுகள் முன்னதாகக் காட்சியளித்துத் தோன்றினது போன்றதேயாகும் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் அவர் கொடுத்திட்ட காட்சிகளானது, அவர் இன்னமும் மனிதனாக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காண்பிக்காது. அவர் மனிதனாகக் காணப்பட்டபோது, அவர் கதவு பூட்டப்பட்டிருக்கும் அறைக்குள்ளாக இப்படிப் போனதில்லை; ஓர் ஆவியின் ஜீவியாக இருக்கையில், அவரால் கதவு பூட்டப்பட்டிருக்கும் அறைக்குள் சென்றிட முடியும். ஓர் ஆவியின் ஜீவியாக அவரால் உருவம் எடுத்துத் தோன்றமுடியும், பின்னர் அவர்கள் பார்வையினின்று அவரால் மறைந்து போய்விட முடியும். இப்படி உருவம் எடுப்பதும், மறைந்து போய்விடுவதும் சரீரத்தின் விஷயத்தில் மாத்திரமல்லாமல், வஸ்திரங்களின் விஷயத்திலும்கூடச் செய்யப்பட முடியும். ஒருமுறை அவர் வழிபோக்கராகத் தோன்றினார் மற்றும் ஒருமுறை தோட்டக்காரராகத் தோன்றினார்; ஒருமுறை கதவுகள் பூட்டப்பட்டிருக்கும் நிலையில், மேல்வீட்டறையில் தம்முடைய வழக்கமான உருவத்தில் உள்ளே தோன்றினார். இந்தப் பல்வேறு சந்தர்ப்பங்களில், அவர் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்றபடி வெவ்வேறு வஸ்திரங்களில் காட்சியளித்துத் தோன்றினார். ஒருவகை வஸ்திரத்தை உருவாக்குவதும், இன்னொரு வகை வஸ்திரத்தை உருவாக்குவதும் மற்றும் வெவ்வேறு உருவத்தில் சரீரத்தை உண்டுபண்ணுவதும் அவருக்குச் சுலபமான காரியமாகும். எங்கிருந்து இது விஷயத்தில் அநேகம் கிறிஸ்தவ ஜனங்களுக்குத் தவறான கருத்துக்கள் தோன்றினது என்று சொல்வது கடினம். தப்பறைகளைச் சுட்டிக்காண்பிக்கும்போது நாம் மிகவும் இரக்கத்தோடும், அனுதாபத்தோடும் காணப்பட வேண்டும் மற்றும் நாமும் ஒரு காலத்தில் அத்தப்பறைகளில்

காணப்பட்டிருந்தோம் என்பதையும், மற்றவர்களைப் போன்று நாமும் அத்தப்பறைகளைத் தீவிரமாய்ப் பற்றிக்கொண்டு காணப்பட்டிருந்தோம் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

## நமது கர்த்தர் இனிமேலும் மனிதனல்ல

நமது கர்த்தராகிய இயேசு மாம்சத்தில் கொலையுண்டு, ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார் மற்றும் அதுமுதல் அவர் ஓர் ஆவியின் ஜீவியாகவே இருக்கின்றார். இந்த ஆவியின் ஜீவியையே தமஸ்குவுக்குப் போகிற வழியில் தர்சு பட்டணத்துச் சவுல் கண்டார். தான் கண்டது மகிமையான ஒளியாக இருந்ததென அவர் நமக்குத் தெரிவிக்கின்றார். இயேசுவின் மாம்சம் ஒன்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கவில்லை. இயேசுவின் மெய்யான நிலைமையின் ஒரு கணத்தோற்றத்தினைக் கண்டதாக அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்; "எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார்" (1 கொரிந்தியர் 15:8; திருவிவிலியம்); அதாவது இங்குச் சபையின் உயிர்த்தெழுதலின் பிறப்பிற்குரிய காலத்திற்கு முன்னதாகப் பிறத்தல் என்ற விதத்தில் அப்போஸ்தலன் கூறியுள்ளார். நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம் மற்றும் பிறப்பு முதலாம் உயிர்த்தெழுதலில் காணப்படும்.

---

**R5341 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]**

# இரத்தத்தில் ஜீவன் இருக்கின்றது

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனைக் laid down/கொடுத்து வைத்தபோது, அந்த ஜீவனைத் தமக்காகப் பயன்படுத்தும் வண்ணமாக, அந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையை அவர் தம் வசமாய் வைத்துக்கொள்ளவில்லை. "விலையுயர்ந்த முத்தை" அடைய விரும்புபவர்கள் அனைவரும், தங்களிடத்திலுள்ள யாவற்றையும் விற்க வேண்டும், அதாவது தாங்கள் அனுபவிக்கின்றதான பூமிக்குரிய ஜீவன் (அ) சிலாக்கியங்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்திட வேண்டும் என்று அவர் நமக்கு உவமை ஒன்றில் கூறியுள்ளார் (மத்தேயு 13:45, 46). நமது கர்த்தர் பரிபூரணமான பூமிக்குரிய ஜீவனை உடையவராய் இருந்தார். அவர் அந்த ஜீவனை ஒப்புக்கொடுத்தார். "அவர் தம்முடைய ஆத்துமாவை (ஜீவனை) மரணத்திலூற்றினார்" (ஏசாயா 53:12). இது எதன் அடிப்படையில் ஆகும்? நமக்கு முன்பாக அவர் முன்வைத்ததான அதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும்; அதாவது "நாம் பிழைத்திருக்க வேண்டும் எனில், நாம் மரித்தாக வேண்டும்; நாம் ஆளுகைசெய்ய வேண்டுமெனில், நாம் பாடுபட வேண்டும்; நாம் அவரோடுகூட மரித்திருக்க வேண்டும்" என்பதாக அவர் நம் முன் வைத்ததான இதே காரியங்களினுடைய அடிப்படையிலேயே ஆகும் (2 தீமோத்தேயு 2:11, 12). ஆகையால் அவரது அடிச்சுவடுகளைப் பின்தொடருகின்றவர்களாகிய நாமும், அவர் செய்த வண்ணமாகவே செய்ய வேண்டும்.

நாம் அவரது சீஷர்களெனச் சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்போமானால், நாம் இயேசு செய்ததையே செய்கிறவர்களாக இருப்போம். இவை அனைத்தும் உலகத்துக்காகச் செயல்படுத்தப்படப்போகின்றது. அந்தப் பூமிக்குரிய ஜீவனை அவர் கையளித்தது என்பது, பாதுகாத்து வைத்துக்கொள்வதற்காக இராமல், மாறாக இறுதியில் அதை மனுக்குலம் அனைத்திற்கும் (கைமாற்றிவிடுவதற்கே) கொடுத்துவிடுவதற்கே ஆகும். மனித ஜீவனுக்கான உரிமை இன்னும் அவரது கட்டுப்பாட்டின்கீழாக இருக்கின்றது. அவரே மாபெரும் மத்தியஸ்தராக, தம்மால் ஊற்றப்பட்டதான ஜீவனை, மனுக்குலத்தின் உலகத்திற்காகக் கொடுத்தருளுவார்.

சபையாகிய நாம் அவரோடுகூட, அவரது பாடுகளில் பங்கடையத்தக்கதாகவும், ஆவிக்குரிய தளத்தில் அவரது மகிமையான இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாகவும், அவர் இப்பொழுது நமக்கு,

தம்முடைய புண்ணியத்தைத் தரிப்பிக்கின்றவராய்/சாற்றுகின்றவராய் இருக்கின்றார். ஆகையால் இந்தப் பாத்திரமானது, பூமிக்குரிய ஜீவனையும், அதனுடன் உள்ள உரிமைகள் அனைத்தையும் முழுமையாய்த் துறந்துவிடுதலைக் குறிக்கின்றதாயிருக்கும். நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவனானது பறிமுதல் செய்யப்படவில்லை, மாறாக laid down/கொடுத்து வைக்க மாத்திரமே பட்டது (யோவான் 10:17, 18). அதைக் கொடுத்து வைப்பதற்கான நோக்கம் என்னவெனில், மனுக்குலம் அதனை பெற்றுக்கொள்ளத்தக்கதாக அதை அவர் தனிப்பட்ட விதத்திலும், என்றென்றுமாகவும் துறந்துவிடுவதாக இருந்தது. அவர்கள்வசம் கைமாற்றும் காரியத்தினை, அவர் இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை, எனினும் இந்த நோக்கத்திற்காகவே, அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிட்டார்.

## பறிக்கொடுக்கப்படாத, பூமிக்குரிய ஜீவ-உரிமை

உலகத்தை மீட்டுக்கொள்வதற்கான தெய்வீகச் சித்தத்தை நிறைவேற்றும் பணியை நமது கர்த்தர் மேற்கொண்டார் மற்றும் அதை நிறைவேற்றும் காரியத்தினைத் தொடர்ந்தார், எனினும் அவர் நோக்கத்தினை இன்னமும் நிறைவேற்றி முடிக்கவில்லை. அவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார், ஆனால் அதை அவர் பறிக்கொடுத்து இழந்துபோகவில்லை. அவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டபோது, அவருக்கு இன்னமும் அந்தப் பூமிக்குரிய ஜீவன்மீது உரிமை இருந்தது மற்றும் அந்த ஜீவனைத் தமக்காக தாம் பயன்படுத்தக்கூடாது என்றும், அதைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய உலகம் அனைத்திற்கும், தம்முடைய சபை தம்மோடுகூட ஆளுகை செய்யும் ஆயிர வருடங்களடங்கிய தம்முடைய ஆளுகையின் முடிவில், அது கொடுக்கப்பட வேண்டும் என்றுமுள்ள புரிந்துகொள்ளுதலை உடையவராய் இருந்தார்.

ஆகையால் அவரது ஜீவன், அவரிடமிருந்து பிடுங்கப்படவில்லை; அவரது கீழ்ப்படியாமையினால் மாத்திரமே அவரிடமிருந்து, அவரது ஜீவன் பிடுங்கப்பட முடியும் (லேவியராகமம் 18:5; எசேக்கியேல் 20:11; லூக்கா 10:28; உரோமர் 10:5). அவர் தாமாய் முன்வந்து, தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகத் தமது ஜீவனைக் laid down/கொடுத்து வைத்தார். தம்முடைய ஜீவனானது தெய்வீக நீதியினுடைய கரங்களில் சொத்தாகக் காணப்படத்தக்கதாகவும், இதினிமித்தம் காலங்கள் வரும்போது, அந்தச் சொத்தை தாம் மனுக்குலத்திற்காகப் பயன்படுத்தத்தக்கதாகவும், அவர் தமது ஜீவனைக் கொடுத்து வைத்தார் (யோவான் 6:51).

நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவனானது என்றென்றைக்குமாய்க் கொடுக்கப்பட வேண்டும் என்பதும், அதை அவர் திரும்ப எடுக்கக்கூடாது என்பதும் தெய்வீக நோக்கமாய்க் காணப்பட்டது. அவர் தம்முடைய ஜீவனை யோர்தானில் அர்ப்பணம் பண்ணி, அந்தப் பலியைக் கல்வாரியில் முடித்தார். சுவிசேஷ யுகம் முழுவதிலும், அவர் தம்முடைய மறைபொருளான சரீரத்தைப் பலிசெலுத்திக் கொண்டுவருகின்றார். இந்தச் சரீர அங்கத்தினர்களுடைய பலியினை அவர் நிறைவேற்றின உடனே, மகா பிரதான ஆசாரியனுக்குச் சொந்தமான, அவர்களது ஜீவனுக்கான உரிமைகளானது, புதிய உடன்படிக்கையை முத்திரிப்பதின் மூலமாக உலகத்தை வாங்குவதற்காக, மீட்டுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும். இதன்பின் உடனடியாக, அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அவரது புண்ணியமானது, அவரது ஜீவ-உரிமையானது முழுச்சபையும், திரைக்கு அப்பால் கடந்து போகாததுவரையிலும் அடுத்தக் கட்டமாகச் செயல்படுத்தப்படாது என்பது, கிருபாசனம் ஆட்டினுடைய இரத்தத்தினால் தெளிக்கப்படும் காரியத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. நமது கர்த்தருடைய இரத்தமும், அவரது சரீரத்தினுடைய இரத்தமும், அனைத்தும் ஒரே இரத்தமாயிருக்கின்றது. அநேக அங்கத்தினர்கள் அடங்கின ஓர் ஆசாரியன் ஆகும். அது அனைவருக்குமான, அதாவது சர்வலோகத்தினுடைய பாவங்களுக்குமான ஒரே பாவநிவாரணம் ஆகும் (1 யோவான் 2:2).

---

**R4461 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]**

# எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம்

## பரிசுத்த யோசேப்பு மாநாடு

தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக நமது கர்த்தராம் இயேசு, நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிதலுள்ள சுதந்திரவாளியெனத் தாம் உரிமைப்பெற்றிருந்த பூமிக்குரிய ஜீவனையும், சாம்ராஜ்யத்தையும் வைத்துக்கொள்வதற்குப் பதிலாக, அதை அவர் பலிசெலுத்திவிட்டார் - மரணத்தில் அதைக் laid it down/கொடுத்து வைத்திட்டார். இதுவே பிதாவின் எண்ணமாக இருந்தது - அதாவது பூமிக்குரிய ஜீவனையும், உரிமைகளையும் முழுமையாய்ப் பலிசெலுத்துமளவுக்கு இயேசு தமது விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் காண்பிப்பாரெனில், பிதா அவரைத் தெய்வீக வல்லமையினால் மரணத்திலிருந்து மறுபடியுமாய் பூமிக்குரிய நிலைமைகளுக்கு இல்லாமல், மாறாக பரலோக நிலைமைகளுக்கு எழுப்பிட - அதாவது "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவரை உயர்த்திட" எண்ணம் கொண்டிருந்தார் (எபேசியர் 1:20). இப்படி உயர்த்தப்பட்டிருக்கும் இயேசு அவரால் பலிசெலுத்தப்பட்ட பூமிக்குரிய உரிமைகளைத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டும் என்பது பிதாவின் எண்ணமாக இருந்தது - இவற்றைப் பாவத்தின் விளைவாக தங்கள் ஜீவன்களையும், பூமிக்குரிய உரிமைகளையும் இழந்துபோயிருந்த ஆதாமையும், அவரது சந்ததியாரையும் ஆசீர்வதிக்கத்தக்கதாகக் give away/கொடுத்துவிடத்தக்கதாக, இயேசு இவற்றைச் சொத்தாக அல்லது விலையேறப்பெற்ற உடைமையாகப் பெற்றிருக்க வேண்டும் என்பது பிதாவின் எண்ணமாக இருந்தது. உயிர்த்தெழுந்த மற்றும் மகிமையடைந்த நமது கர்த்தர் பரமேறினபோது, ஆதாமையும், அவரது சந்ததியிலுள்ள அங்கத்தினன் ஒவ்வொருவரையும் சீர்ப்பொருந்தபண்ணுவதற்கு அவசியமான ஆசீர்வாதத்தினைப் போதுமானதாகப் பெற்றிருந்தவராய் இருந்தார். கிறிஸ்துவினுடைய அந்த ஒரே பலியானது அனைவருக்கும் போதுமானதாய்க் காணப்படுகின்றது. இயேசு ஒப்புக்கொடுத்துவிட்டவைகளானது, பூமிக்குரிய ஆசீர்வாதங்களாக, பூமிக்குரிய ஜீவனாக, பூமிக்குரிய வல்லமையாக, பூமிக்குரிய பரதீசாக இருந்ததே ஒழிய, பரலோகக் காரியங்களல்ல.

---

**R4905 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]**

# நமது கர்த்தருடைய ஜீவ-உரிமைகள் மீதான கேள்விகள்

## ஆவிக்குரிய ஜீவ-உரிமைகள் பலிசெலுத்தப்படவில்லை

கேள்வி.--நமது கர்த்தர் மனிதனாகிடுவதற்கு முன்னதாக ஓர் ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்ட போது, அவர் எந்த உரிமைகளை உடையவராய் இருந்தார் மற்றும் அவர் மனிதனான போது, அந்த உரிமைகளுக்கு என்னவாயிற்று?

பதில்.--ஐசுவரியமானவராய்க் காணப்பட்ட நமது கர்த்தர் பூமிக்குரிய உரிமைகளுக்கும் பரிபூரணத்திற்கென்றும், பரலோக உரிமைகளையும், பரிபூரணத்தையும் (exchange) மாற்றிக்கொண்டதன் காரணமாக, அவர் நம் நிமித்தமாய்த் தரித்திரரானார் (2 கொரிந்தியர் 8:9). இந்த (exchange) மாற்றிக்கொள்ளுதலானது பலியல்ல (பலியாக ஏறெடுக்கப்படவில்லை); ஏனெனில் மனிதனாகிய கிறிஸ்து இயேசுதான் மீட்கும்பொருளானார். மனிதனாகிடுவதற்கு முன்னதாக அவர் கொண்டிருந்த உரிமைகள் எதையும் அவர் பலிசெலுத்திட்டதாக வேதவாக்கியங்களில் எதுவும்

சொல்லப்படவில்லை. எனினும் அவற்றை "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு" துறந்துவிட்டார் (எபிரெயர் 12:2).

மனிதனுக்கு அவசியமான உரிமைகள், பூமிக்குரிய உரிமைகளாக, மனுஷீக உரிமைகளாகக் காணப்படுகின்றன; மேலும் இந்த உரிமைகளைத்தான், தம்முடைய பூமிக்குரிய ஜீவனைப் பலிசெலுத்தினதன் வாயிலாக இயேசு மீட்டுக்கொண்டார். ஓர் ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்ட அவரால் ஆவிக்குரிய ஜீவிக்கடுத்த உரிமைகளைப் பலிசெலுத்தியிருக்க முடியாது; ஏனெனில் எந்த ஆவிக்குரிய ஜீவிகளும் மரணத்திற்குள்ளாகத் தீர்க்கப்படவில்லை. மனிதனாகிய ஆதாமையே அவர் மீட்கவேண்டியிருந்தது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:21, 22).

## மீட்கும்பொருள் விலைக்கிரயம் கல்வாரியில் கொடுக்கப்பட்டது

கேள்வி -- கல்வாரியில் நமது கர்த்தர் எதைச் செய்துமுடித்தார்?

பதில் -- நமது கர்த்தர் ஜீவனைக் கொடுத்து வைத்த காரியமானது, நாம் ஏற்கெனவே காண்பித்திருந்ததுபோன்று மனுக்குலத்தை மீட்டிடவில்லை, மாறாக தேவனுடைய ஏற்றகாலங்களிலும், வேளைகளிலும் மனுக்குலம் விடுவிக்கப்படத்தக்கதாக மீட்கும்பொருள் விலைக்கிரயம் வழங்கப்பட்ட காரியமாகக் காணப்பட்டது; அவர் தம்மையே *antilutron*-ஆக (சரிநிகர் சமான விலையாக) கொடுத்தவராயிருந்தார் (1 தீமோத்தேயு 2:5, 6).

நமது கர்த்தருடைய பலியும், அவர் மனமுவந்து தமது ஜீவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததும், தேவ பார்வையில் சிறப்பானதாய்க் காணப்பட்டது மற்றும் உயர்தளத்தில் ஒரு புதிய ஜீவனை அவருக்குக் கொடுப்பதன் வாயிலாக பிதா அவருக்கு வெகுமானமளித்தார். புதிய ஜீவனானது யோர்தானில், அவரது ஜெநிப்பித்தலில் துவங்கினது மற்றும் அவரது உயிர்த்தெழுதலில் நிறைவடைந்தது. பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையானது, பாவத்தின் காரணமாய்ப் பறிக்கொடுக்கப்படாததால், அது தொடர்ந்து நமது கர்த்தருக்கு உரியதாகவே இருந்தது. ஒரு மனிதனுடைய பாவத்திற்காக என்று, நீதிக்கு ஈடுகட்டும் வண்ணமாக அந்தப் பூமிக்குரிய ஜீவ-உரிமையினை அவர் கொடுக்க வேண்டுமென்றிருக்கின்றார். மாம்ச - ஆத்துமாவாக அவர் மரணத்திற்குள்ளாக்கப்பட்டார். அவர் ஆவிக்குரிய ஆத்துமாவாகப் பலனளிக்கப்பட்டார். ஆதாம் மற்றும் அவரது சந்ததியாருக்காகப் பயன்படுத்துவதற்கும், அவர்களுக்காகப் புதிய உடன்படிக்கையினை முத்திரையிடுவதற்குமென்று தம்முடைய மாம்ச ஆத்துமாவிற்கடுத்த உரிமையினை அவர் உடையவராய் இருக்கின்றார்.

## நீதியும்/புண்ணியமும், ஜீவ - உரிமையும்

கேள்வி -- உலகத்தின் பாவங்களுக்காகவெனக் கிறிஸ்துவின் புண்ணியம்/நீதி பயன்படுத்தப்படும் காரியத்திற்கும், உலகத்தின் பாவங்களுக்காகவெனக் கிறிஸ்துவின் ஜீவ-உரிமையானது அவரால் கொடுக்கப்படும் காரியத்திற்கும் இடையிலான வித்தியாசத்தினை நாம் எப்படி அறிந்துகொள்வது?

பதில் -- மனித தளத்தில் நமது கர்த்தருக்குக் காணப்பட்ட நீதியானது, அவர் மனிதனாகக் காணப்பட்டபோது, அவருக்கு உரியதாகவே காணப்பட்டது. இப்பொழுதோ மனிதன் என்ற விதத்தில் அவருக்கு நீதி ஏதுமில்லை. அந்த நீதியினால் உண்டான தகுதியை/credit மாத்திரமே பிதாவின் பார்வையிலும், நீதியின் பார்வையிலும் ஒரு புண்ணியமாக - அதாவது சுவிசேஷ யுகத்தின்போது சபைக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளதும், ஏற்றகாலத்தில் உலகத்திற்காகப் பயன்படுத்தப்படப்போகின்றதுமான புண்ணியமாகப் பெற்றிருக்கின்றார்.

மனுஷீக ஜீவ-உரிமைகளானது, இயேசு மரிக்கும் தருணம்வரையிலும் அவருக்கு அவசியமாய் இருந்தது. மரிக்கையில் பிதாவின் ஏற்பாட்டிற்கு இசைவாக, அவர் அதைப் பிதாவிடம் ஒப்படைத்துவிட்டார். "பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்று அவர் கூறினார் (யோவான் 18:11). அவர் மனிதனாக இருந்தபோது, அந்த ஜீவ-உரிமைகளானது அவருக்குத் தேவையானவைகளாக இருந்தன; ஆனால் இப்பொழுதோ அவை அவருக்கு அவசியமில்லை; ஏனெனில் அவர் மேலான உரிமைகளை உடையவராயிருக்கின்றார். ஆனாலும் அவர் மனுஷீக ஜீவனுக்கான ஓர் உரிமையினையும் உடையவராயிருக்கின்றார்; இந்த உரிமையானது அவருக்கென்று தனிப்பட்ட விதத்தில் அவசியமில்லாததாகும் - எனினும் அது அவருக்கு - அதாவது மனுக்குலத்தின் உலகத்தார் விரும்பும்பட்சத்தில், அவர்கள் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாய், அவர்களுக்குக் கொடுத்திடுவதற்கு, அவருக்குத் தேவையாய் இருக்கின்றது.

கர்த்தரானவர் அவரது நிலைமையின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்பட வேண்டும். முதலாவதாக அவர் ஆவியின் ஜீவியாகக் காணப்பட்டிருந்தார்; இரண்டாவதாக அவர் மாம்சமாக்கப்பட்டவராய் இருந்தார் - பரிசுத்தராயும், மாசில்லாதவராகவும், குற்றமில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும் காணப்பட்டார்; மூன்றாவதாகப் பூமிக்குரிய ஜீவனானது தம்மிடமிருந்து எடுக்கப்படத்தக்கதாக அவர் அனுமதித்ததின் காரணமாக, அவரை உயர்வாய் உயர்த்தி அவருக்குத் தேவன் தனிப்பட்ட விதத்தில் பலனளித்தார் (பிலிப்பியர் 2:9).

இந்த மகிமையான ஜீவி சில விஷயங்களை மனுக்குலத்தின் உலகத்திற்கென்று செய்யும்படிக்குத் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார். இக்காரியங்களையெல்லாம் செய்வதற்கான வல்லமை என்பது, அவருக்கென்று தேவைப்படாத வண்ணமுள்ள பூமிக்குரிய ஜீவனுக்கான ஓர் உரிமையினை அவர் இன்னமும் உடையவராய் இருக்கின்றார் எனும் உண்மையின் அடிப்படையினாலானதாகும். ஆயிரவருட யுகத்தின்போது உலக ஜனங்கள் புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இசைவாக வருகையில், அவர்களுக்குப் படிப்படியாக அதைக் கொடுக்கத்தக்கதாக, அதை அவர் வைத்திருக்கின்றார். அதில் ஒரு பகுதியை - தம்முடைய அங்கத்தினர்களாகுவதற்கு விருப்பம்கொள்பவர்களுடைய குறைவுகளை மூடத்தக்கதாகவும், அவர்களது பலிகளைப் பிதா ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவானதாக்கவும் வேண்டி இப்பொழுது சாற்றுகின்றார்.

கிறிஸ்துவின் புண்ணியமானது/நீதியானது, பிதாவின் சித்தத்தைச் செய்கிறதில் காணப்பட்டது. அதற்குப் பிதா திரைக்கு அப்பக்கத்தில் புதிய சுபாவத்தினால் அவருக்குப் பலனளித்தார். மேலும் அந்த நீதி/புண்ணியம் இன்னமும் காணவேபடுகின்றது; மேலும் அவர் மனுக்குலத்திற்கு எதைச் செய்தாலும்கூட, அவர் பிதாவின் பார்வையில் எப்போதுமே தனிப்பட்ட ஒரு நீதியை/புண்ணியத்தினை உடையவராகவே இருப்பார். ஆகையால் அவர் தம்முடைய நீதியை/புண்ணியத்தினைக் கொடுத்துவிடுவார் என்று நாம் எண்ணிடமுடியாது; இப்படிக் கொடுத்துவிடுவாரானால், அவர் நீதி/புண்ணியம் இல்லாமல் விடப்படுவார். ஆனால் தமக்கான வெகுமானத்தை அடைந்தாலும், அவர் மனுஷீக ஜீவனுக்கான உரிமையினை உடையவராய் இருப்பார் மற்றும் இப்படிக் காணப்படுவதே தேவனுடைய ஏற்பாடாகவும் காணப்படுகின்றது. இதுவே பிதாவின் பார்வையில் ஒரு புண்ணியமாக - ஆதாம் மற்றும் அவரது பிள்ளைகளுடைய மீட்பிற்கான ஒரு கிரயமாக - அவர் விலைகொடுத்து வாங்கினதாகக் காணப்படுகின்றது. இதை அவர் சீக்கிரத்தில் உலகத்திற்காகப் பயன்படுத்தப்போகின்றார் மற்றும் இதைத்தான் அவர் இப்பொழுது நமக்குத் தரிப்பிக்கின்றார்/சாற்றுகின்றார்.

## கிறிஸ்துவின் புண்ணியத்தினை/நீதியினைச் சாற்றுதல்

கேள்வி -- "கிறிஸ்துவினால் சாற்றப்படும் புண்ணியம்/நீதி" என்றால் என்ன?

பதில் -- கிறிஸ்துவினால் சாற்றப்படும் புண்ணியத்தைக் குறித்துப் பேசுகையில், அவர் தனிப்பட்ட ஒரு புண்ணியத்தினை, அவருக்கென்று ஒரு நீதியினை வைத்திருந்தார் என்றும், அதை அவர் ஒருபோதும் கொடுத்துவிடவில்லை என்றும் நாம் தெளிவாய் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அவரது நீதி, அவருக்கு வேண்டியிருந்தது. அப்படியானால் அவர் நீதியை இழக்காமல் அவரால் அவரது நீதியினை

நமக்குக் கொடுத்திட முடியாது. இதே விஷயம் அவரது ஜீவ-உரிமை விஷயத்திலும் பொருந்துகின்றதாய் இருக்கும். ஜீவிப்பதற்கான ஓர் உரிமையினை அவர் உடையவராய் இருந்தார்; **ஆனால் ஜீவிப்பதற்கான இந்த உரிமையினை அவர் நமக்குத் தரிப்பித்துத் தரவில்லை/சாற்றிடவில்லை**; ஏனெனில் அது அவருக்கும் வேண்டியதாயிருந்தது. அவருக்கு அவரது சொந்த தனிப்பட்ட புண்ணியம்/ நீதி தேவையாயிருந்தது.

அப்படியானால் ஜீவ-உரிமையினையும், நீதியினையும் அவர் ஆயிரவருட யுகத்தின்போது மனுக்குலத்திற்குக் கொடுத்திடுவார் என்றும், சுவிசேஷ யுகத்தின்போது சபைக்குச் சாற்றுகின்றார் என்றும் நாம் எந்த அர்த்தத்தில் சொல்லி வருகின்றோம்? பின்வரும் விதத்திலாகும்: அவர் தமது **மனுஷீக** ஜீவ-உரிமையினை - அதாவது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் கீழ்ப்படிதலுக்கான பலனாக அவருக்குரியதான புண்ணியத்தினை, அதாவது ஒரு மனுஷ ஜீவியாக வாழ்வதற்கான உரிமையினை அல்லது சிலாக்கியத்தினை மனுக்குலத்திற்குக் கொடுத்திடுவார். அந்த உரிமையானது நியாயப்பிரமாணத்திற்கான கீழ்ப்படிதலின் காரணமாக அவரால் அடையப்பெற்றதாகும் (ரோமர் 10:5; கலாத்தியர் 3:12). இப்பொழுது அவர் உயர்வாய் உயர்த்தப்பட்டிருக்கின்றார்; திவ்விய சுபாவமுடையவராய் இருக்கின்றார் மற்றும் இனிமேல் மனுஷீக ஜீவனுக்கான அந்த உரிமையும், அதனோடுகூட வரும் நீதியும் அவருக்குத் தேவைப்படாது. அவர் தமது தற்போதைய நிலைமையில் முற்றிலும் திருப்தியடைந்தவராகவும், முழுமையடைந்தவராகவும் காணப்படுகின்றார். விரைவில் அவர் மனுஷீக ஜீவனுக்கான உரிமையினையும், அதனோடுகூட வரும் நீதியையும், அதாவது அந்த மாம்சீக பலியின் புண்ணியத்தினை உலகத்திற்குக் கொடுக்கவிருக்கின்றார். இதையே அவர் தற்காலத்தில் சபையின் அபூரணங்களை நிறைவுபடுத்திடுவதற்கென்று, சபைக்குச் சாற்றுகின்றவராய் இருக்கின்றார். நாம் அவரில் முழுமையடைந்திருக்கின்றோம், ஆகையால் அவர் வாயிலாக நாம் நம்மையே பலிசெலுத்திடும்போது, இது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க பலியாகக் காணப்படும் மற்றும் பரிசுத்தமானதாய்க் கருதப்படும்.

## ஜீவ-உரிமைகள் புது உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படுகின்றது

கேள்வி -- கல்வாரியில் கொடுத்து வைக்கப்பட்டதான இயேசுவின் ஜீவ-உரிமைகளானது, ஆயிரவருட யுகத்தின் போது எங்கே காணப்படும்?

பதில் -- மகாபெரும் மீட்பரின் ஜீவ-உரிமை என்று நாம் சொல்லுகிற காரியமானது, பாவநிவாரண இரத்தத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்று நாம் புரிந்திருக்கின்றோம். நிழலில் பாவநிவாரண நாளின் இறுதியில், பாவநிவாரண இரத்தமானது ஒட்டுமொத்த மனுக்குலத்திற்காக நீதிக்குச் செலுத்தப்படும் மற்றும் அது அவர்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படும்; அதாவது அப்போஸ்தலன் சொல்லுகின்றதுபோல், . . . "ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக" ஆகும் (எபிரெயர் 2:17). ஜனங்கள் தங்கள் மரண ஆக்கினையினின்று விடுதலைப்பண்ணப்பட்டவுடன், அவர்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள துவங்குவதற்குரிய நிலைமையில் காணப்படுவார்கள்; ஆனாலும் இக்காலத்திற்கு முன்பல்ல. மகா பிரதான ஆசாரியனென நமது கர்த்தர் சுவிசேஷ யுகத்தின் முடிவில், தேவனுக்கும், ஆபிரகாமின் சந்ததியாகிய மாம்சீக இஸ்ரயேலுக்கும் இடையில் பாவநிவாரண இரத்தத்தைக்கொண்டு புது உடன்படிக்கையினை முத்திரையிடுவார்; மேலும் அவர் "தம்முடைய சரீரமாகிய சபையோடு," அந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருப்பார். அந்தப் பிரமாணத்திற்கு முழு இசைவாக வருகின்ற யாவரும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். அந்த வருஷங்கள் முழுவதும் - திரும்பக்கொடுத்தலின் சிலாக்கியங்களை ஜனங்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று வாக்களிக்கின்றதான, அந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை, காரியங்களை நடந்தேற்றுவார்.

அப்போது மனுஷ ஜீவனுக்கான உரிமையானது மீட்பராகிய நமது கர்த்தருடைய கரங்களினின்று கடந்துபோய், அதுமுதற்கொண்டு உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படும்; அது மனிதன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் அறிவித்த யாவற்றையும் உறுதியளித்திடும். மனுஷருடைய கல்லான இருதயம் மாறி, சதையான இருதயம் உண்டாகும்; மற்றும் இந்த உடன்படிக்கையினுடைய

நிபந்தனைகளுக்கேற்ப ஜீவிப்பவர்கள், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம். நமது கர்த்தரினால் கொடுத்துவைக்கப்பட்டதான ஜீவ-உரிமைகளே, ஆயிரவருட யுகத்தின்போது, புது உடன்படிக்கையாய்க் காணப்படும். அந்தப் பிரமாணத்தினைக் கைக்கொள்ள தவறுபவர்கள் சிட்சைகள் பெறுவார்கள். இந்த ஏற்பாட்டின் வாயிலாக கிறிஸ்து புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரென, ஆயிரவருடங்களளவும் ஆசீர்வாதங்களை வழங்கிக்கொண்டிருப்பார். உலகத்தின் பாவங்களுக்காக - உலகத்தின் மீட்பிற்காக நீதியிடம் கொடுக்கத்தக்கதாக, ஜீவனுக்கான உரிமையினை நமது கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றார். இந்த யுகத்தின் முடிவில், அவர் இந்த உரிமையினைக் கொடுத்துவிட்ட உடனே, நீதி அதைக்கொடுக்க, மனுக்குலம் அதைப் பெற்றுக்கொள்வார்கள்.

---

**R4587 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]**

இயேசுவின் மரணமானது உலகத்தினை மீட்டிடவில்லை; மாறாக அம்மரணமானது, எதிர்க்காலத்தில் பிரயோகிக்கப்படும் உலகத்திற்கான மீட்கும்பொருள் கிரயம் ஆனது. நமது இரட்சகர் தம்முடைய ஜீவனைக் கொடுத்துவைத்திட்டார், திவ்விய பரிந்துரைக்குக் கீழ்ப்படிந்தவராக அதைப் பிதாவிடம் ஒப்படைத்துவிட்டார். இதற்கு வெகுமானமாய் அவர் உயர்வாய் உயர்த்தப்பட்டு, எல்லா நாமத்திற்கும்மேலாக, ஆவிக்குரிய தளத்தில் உயர்த்தப்பட்டுள்ளார். பாவத்தின் காரணத்தினால் அவரது மனுஷீக உரிமைகளானது forfeited/பறிக்கொடுக்கப்படாததால், பிதாவின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தவராக அதைக் laid down/கொடுத்து வைத்தவராக மாத்திரம் காணப்படுவதினால், அதை மனுக்குலத்திற்குச் சொத்தாக அல்லது மரண சாசனமாகக் கொடுத்துவிடத்தக்கதாக, அவற்றை உடையவராய்க் காணப்படுவார்.

---

**R4642 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]**

## ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை

இயேசு எதைப் பலிசெலுத்திட்டார்? எதைக் கொடுத்திட்டார்/கொடுத்துவைத்திட்டார்? என்று நாம் தெளிவாகக் காணமுடிகின்றதா? அவர் தம்மையே கொடுத்தார், பிதாவின் சித்தம் என்னவாக இருப்பினும் அதற்குத் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டார், மாறாக அவரிடமிருந்து பூமிக்குரிய ஜீவன் எடுத்துப்போடப்படத்தக்கதாக அவர் பாவம்செய்து, அது அவரிடமிருந்து பறித்தெடுக்கப்படவில்லை. இந்த ஜீவனைப் பரலோக சுபாவத்திற்காகவென்று அவர் கொடுத்து மாற்றிக்கொள்ளவும் இல்லை. **"No man taketh it from me, but I lay it down of myself. I have power to lay it down, and I have power to take it again. This commandment have I received of my Father." "ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்"** (யோவான் 10:18) எனும் அவரது வார்த்தைகளுக்கு இசைவாக தம் பூமிக்குரிய உரிமைகளை அவர் ஒப்படைக்க அல்லது கொடுத்துவைக்க மாத்திரமே செய்தார். அதை அவரிடமிருந்து எடுத்துப்போடத்தக்கதாக எந்த மனுஷனுக்கும் அதிகாரமில்லை; ஏனெனில், "நியாயப்பிரமாணத்தைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்" என்று தேவன் வாக்களித்துள்ளார். ஆகையால் நமது கர்த்தர், தம்முடைய ஜீவனைத் தாமே முன்வந்து கையளித்துக் கொடுக்கவில்லையெனில், அவரது ஜீவனானது பாதுகாக்கப்பட்டிருக்கும்.

மறுபடியும் எடுத்துக்கொள்ளத்தக்கதாக அவர் அதைக் கொடுத்தார்/கொடுத்துவைத்தார். "உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறி அதைப் பிதாவின் கரங்களில் கொடுத்துவைத்திட்டார். ஆகையால் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தபோது, புதுச்சிருஷ்டியாகிய அவருக்கு பூமிக்குரிய ஜீவனுக்கும், பூமிக்குரிய பாதுகாப்புக்கும், பூமிக்குரிய கனத்துக்கும், மகிமைக்கும், பூமிக்குரிய ஆளுகைக்கும் மற்றும் அதிகாரத்திற்குமுரிய அவரது உரிமைகள் அவருடையதாகவே இருந்தன. தம்முடைய பூமிக்குரிய உரிமைகள் எதையும் அவர் இழந்துபோகவும் இல்லை, பறிக்கொடுத்திடவுமில்லை. இந்தப் பூமிக்குரிய உரிமைகளே, கிறிஸ்து மூலமாக ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்குக் கடந்துவரும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் அடிப்படையாயின.

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**1. (Q372:2) இயேசு - ஜீவ-உரிமைகள்.**

கேள்வி (1911)-2- அர்ப்பணிப்புச் செய்தபோது இயேசு தம்முடைய ஜீவ-உரிமைகளைக் laid down/கொடுத்து வைத்துவிட்டாரெனில், அவரது உயிர்த்தெழுதலில் அவர் இன்னமும் அவற்றை எப்படிப் பெற்றிருக்கிறவராகக் காணப்பட முடியும்?

பதில் - நாம் ஆங்கில மொழியினை இதுவரையிலும் சரிவர கற்றிராததாகத்தான் தோன்றுகின்றது அல்லது நாம் வெவ்வேறு பள்ளிகளில் பயின்றவர்களாகவும், வெவ்வேறு அகராதிகளைப் பெற்றிருந்தவர்களாகவும் தோன்றுகின்றது - ஏனெனில் இந்த ஒரு கருத்தினை, மனதில் ஒரேமாதிரியான சிந்தனையுடைய கர்த்தருடைய ஜனங்கள், வெவ்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தி வெளிப்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். இப்பொழுதும் ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்தல் (lay down life-rights) என்றால் என்ன?

இயேசு தம்மை அர்ப்பணிக்கையில், "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்" என்று கூறினபோது, அவர் எதை lay down/ ஒப்படைத்தார்? அவர் தமது சித்தத்தை ஒப்படைத்தார். அவருடைய சித்தத்தில் எவைகளெல்லாம் உள்ளடங்குகின்றது? அவருக்குச் சம்பவிக்கவிருக்கும் அனைத்தையும் - அவரது ஜீவனையும், எல்லா வகையான அவரது உரிமைகள் அனைத்தையும், அவரது சித்தமானது உள்ளடக்கினது; அவர் தம்முடைய முழுச்சித்தத்தை, தமது முழு இருதயத்தைத் தேவனுக்குக் கொடுத்தபோது, அது அனைத்தையும் உள்ளடக்கினதாக இருந்தது. அப்படியானால் அவரிடத்தில் ஜீவ-உரிமைகள் எஞ்சி காணப்படவில்லையா? இருதயமானது அவருக்கு எஞ்சி காணப்பட்டது மற்றும் சிலுவையில் "முடிந்தது" என்று சத்தமிடுவது வரையிலும் ஒப்படைப்பதற்கு அவரிடம் அந்த ஜீவன் எஞ்சியிருந்தது; ஆகையால் அவர் ஒருவிதத்தில் அவருடைய ஜீவனை ஒப்படைக்கவில்லை மற்றும் அவர் இன்னொரு விதத்தில் அதை ஒப்படைத்தவராகவே இருந்தார்; பிதாவின் சித்தமாக இருக்கும் எதற்கும் தாம் தடைச் சொல்வதில்லை என்றும், பிதாவின் சித்தம் என்னவாக இருப்பினும், தாம் அதைச் செய்வார் என்றும் ஒப்புக்கொண்ட விதத்தில், அவர் அதைக் கொடுத்து வைத்தவராய் இருந்தார். இந்த விதத்தில் அவர் தம்முடைய அனைத்தையும் அர்ப்பணம் பண்ணினார். ஒரு பொருளை lay it down/கொடுத்து வைப்பது என்பது ஒரு காரியமாகவும், அதனை apply/பயன்படுத்திடுவது என்பது இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது. என்னுடைய தொப்பியை இங்கு ஏதோ ஓரிடத்தில் laid down/கழற்றி வைக்கின்றேன் என்று வைத்துக்கொள்ளலாம், ஆனால் அதற்கென்று அது என்னுடைய தொப்பியல்ல என்றாகாது, அப்படித்தானே? என்னுடைய தொப்பி இப்பொழுது எங்கே காணப்படுகின்றது என்றுகூட எனக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் என்னுடைய தொப்பியை நான் கழற்றி வைத்துள்ளேன்; அதை நான் யாரோ ஒருவர் வசத்தில் கொடுத்து வைத்துள்ளேன். இனிமேல் அந்தத் தொப்பிக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றாகாது. அந்தத் தொப்பியை நான் யார் வசத்தில் கொடுத்து வைத்திருக்கின்றேனோ, அவர் உங்களிடத்திற்கு அதைக் கொடுக்கும்படிக்கு அவரிடம் நான் கூறக்கூடாது என்றும் இல்லை. நான் அதைக் கழற்றிவைத்துவிட்டேன்; இன்னொருவர் வசத்தில் அதைக் கொடுத்து வைத்திருக்கின்றேன்; அவர் உங்களிடத்திற்கு அதைக் கொடுக்கும்படிக்கு என்னால் அவரிடம் சொல்லிட முடியும். இப்படியாகத்தான் நமது கர்த்தராகிய இயேசுவும் தமது முழு ஜீவியத்தையும் பிதாவின் கரத்தில் வைத்தவராக, ஒன்றையும் விட்டுவிடாமல் ஒவ்வொரு விஷயத்திலும் பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக தாம் ஆயத்தமாயும், விருப்பமாயும் இருப்பதாகத் தெரிவித்தார். பிதாவின் சித்தப்படி சோதனைகளும், அனுபவங்களும் அவருக்குக் கடந்துவந்தது; இறுதியானது சிலுவையில் மரணமாகும்; மற்றும் அவர் உண்மையுள்ளவராய் இருந்தார்; அவர் எதற்கும் மறுக்கவில்லை, கடைசிமட்டும் தம்முடைய ஜீவனைக் கொடுத்து வைக்கும்படியாக அனுமதித்து, கொடுத்து வைத்திடும் வேலையினை நிறைவேற்றினார்; ஆனால் அந்த ஜீவனுக்கான உரிமை அவருக்கில்லை என்றாகாது; அவர் தம்முடைய ஜீவனைத் துறந்துவிடவில்லை. ஒரு பொருளைக் கீழே வைப்பது அல்லது அதை ஒருவர் வசத்தில்

ஒப்புவிப்பது என்பது துறந்துவிடுவதாகாது. ஆகையால் இயேசு பெற்றிருந்ததும், பிதாவிடம் அவரால் ஒப்புவிக்கப்பட்டதுமான இந்த ஜீவ-உரிமைகளானது, அவரால் துறக்கப்படவில்லை, மாறாக அதைக் கொடுத்து விடுவதற்கென்று (give it away) அவர் இன்னமும் அதை வைத்துவைத்திருக்கின்றார். கொடுத்துவிடுவதற்கென்று அவர் ஒருவேளை இந்த ஜீவ-உரிமைகளைப் பெற்றிருக்கவில்லையெனில், இந்த உரிமைகள் மீது அவருக்கு ஒருவேளை எந்த அதிகாரமும் இல்லையெனில், இவைகளுக்கடுத்த எந்த உரிமைகளும் அவருக்கு ஒருவேளை இல்லையெனில், அவரால் ஒருபோதும் உலகத்தினுடைய இரட்சகராகிட முடியாது; ஏனெனில் இந்த ஜீவ-உரிமைகளைத்தான் அவர் தியாகமாக ஒப்புக்கொடுத்திட்டார் அல்லது பொல்லாத மனிதர்களினால் கல்வாரியில் வைத்துத் தம்மிடமிருந்து எடுக்கத்தக்கதாக அனுமதித்திருந்தார்; இந்த ஜீவனுக்கான உரிமைகள்தான் உலகத்திற்கு அவசியமானவையாகும் மற்றும் தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையில் மாபெரும் மத்தியஸ்தரென அதைப் புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின் கீழ் மனுக்குலத்தின் உலகத்திற்குக் கொடுத்துவிடுவதற்கு அவர் நோக்கம் கொண்டுள்ளார். இந்த ஒரு நோக்கத்திற்காகத்தான், உலகத்திற்கு அவர் இந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளைக் கொடுத்துவிடத்தான், தேவன் அவர் ஓர் இராஜ்யத்தைப் பெற்றிருக்க ஏற்பாடு பண்ணினார்; அவர் உலகத்தை ஆளவும், அவர்களுக்குப் போதிக்கவும், அவர்களுக்காக அவர் கொடுத்துவிடவிருக்கின்றதை, அவரது நிபந்தனைகளின் கீழ், அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகத்தக்கதாக, அவர் என்ன கொடுத்துவிடவிருக்கின்றார் என்பதைக் குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்குள்ளாக அவர்களை அவர் கொண்டுவரவும் தேவன் ஏற்பாடுபண்ணினார்.

## 2. (Q373:1) இயேசு ஜீவ-உரிமைகளைக் கொடுத்தல்.

கேள்வி (1911)-1- யோர்தானிலும், பெந்தெகொஸ்தே நாளிலும் இயேசுவினால் எப்படித் தம்முடைய ஜீவிக்கும் உரிமைகளை, இருமுறை கொடுக்க இயலும்?

பதில் - பெந்தெகொஸ்தே நாளில் அவர் ஜீவ-உரிமைகள் எதையும் கொடுக்கவில்லை. அவர் யோர்தானில் தமது ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்துவிட்டார்/ஒப்புக்கொடுத்திட்டார். பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக அவர் தமது ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்துவிடும் காரியத்தினைக் கல்வாரியில் நிறைவேற்றி முடித்தார். அவர் அங்குத் தம்மைக் கொடுத்து வைத்துவிடும் காரியத்தினை நிறைவேற்றி முடித்தார்; ஆனால் இப்படியாக அவர் தம்மைக் கொடுத்து வைத்துக்கொண்டிருக்கும் காரியமானது, புண்ணியத்தினைப் பயன்படுத்திடும் காரியத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். இந்த ஒரு காரியமே சில மனங்கள் கிரகித்துக்கொள்வதற்கு மிகவும் சிரமமான காரியமாய்த் தென்படுகிறது. ஏன் என்று எனக்குப் புரியவில்லை. என்னுடைய மனதிற்கு இது எளிமையாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்ற காரியமாய் இருக்கின்றது; ஆனால் நமது கர்த்தர் அர்ப்பணிப்பின்போது தம்முடைய ஜீவனைக் கொடுத்து வைக்க ஒப்புக்கொடுத்ததற்கும், அதைக் கல்வாரியில் உண்மையாகவே நிறைவேற்றி முடித்ததற்கும் மற்றும் புண்ணியத்தினை "மகா பரிசுத்த ஸ்தலத்தில்" அவர் பயன்படுத்துவதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தினைக் காண்பது என்பது சில மனங்களுக்கு மிகவும் சிரமமான காரியமாய் இருக்கின்றது. இது விஷயத்தில் உங்களுக்கு உதவிச் செய்யத்தக்கதாக நான் ஒரு பூமிக்கடுத்த உதாரணத்தைப் பயன்படுத்த இருக்கின்றேன்; இதோ அது என்னவெனில்: உங்களிடத்தில் சொத்து ஒன்று இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் அதைப் பத்தாயிரம் டாலருக்கு நீங்கள் விற்றுள்ளீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். "பத்தாயிரம் டாலருக்கென்று எனக்கொரு விசேஷித்த நோக்கம் அல்லது தேவை இருக்கின்றது மற்றும் அந்தச் சொத்தை விற்றுவிடுகின்றேன்" என்று நீங்கள் சொல்லுகின்றீர்கள். முதலாவதாக நீங்கள் (sale-deed) கிரயப்பத்திரம் கொடுப்பதாக முகவரிடம்/காரியஸ்தனிடம் ஒப்பந்தம் போட்டுக்கொள்வீர்கள். இக்காரியமானது யோர்தானில் நமது கர்த்தரினால் பண்ணப்பட்ட உடன்படிக்கை காரியத்திற்கு ஒத்திருக்கின்றது. கொஞ்சம் காலம் கழித்து, அதாவது ஒரு மாதம் கழித்து, நீங்கள் கிரயப்பத்திரத்தில் கையெழுத்திடுவீர்கள் -- அச்சொத்தின் மீதான உங்கள் விருப்பம் யாவற்றையும் விட்டுவிட்டு, பத்தாயிரம் டாலரைப் பெற்றுக்கொண்டு, அதை

வங்கியில் வைப்புத் தொகையாகப் போட்டுவிடுவீர்கள் (deposit). வங்கியில் அந்தப் பணம்தான், அந்தச் சொத்தை விற்றதன் பலனாகக் காணப்படுகின்றது. அந்தப்பணம் (வங்கியில் இருப்பினும்) அது இன்னமும் உங்களுடையதுதான்; சொத்தை விற்றுக்கிடைக்கும் பலனைக்கொண்டு ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படியாக, அச்சொத்தை நீங்கள் விற்றிருக்கின்றீர்கள்; மற்றும் அந்தப்பலன், வங்கியில் காணப்படும் பத்தாயிரம் டாலராகும். சில குறிப்பிட்ட காரணத்திற்குப் பயன்படுத்தும்படி அந்தப்பணத்தை எடுக்கத்தக்கதாக, வங்கிக்கு நீங்கள் காசோலைக் கொடுத்திடலாம் அல்லது வேண்டுகோள் விடுத்திடலாம்.

இந்த நான்கு கட்ட காரியங்களானது, நமது கர்த்தருடைய நான்கு செயல்களுக்கு ஒத்திருக்கின்றது. காரியக்காரனிடத்தில் ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவது போன்று நமது கர்த்தர் முதலாவதாகத் தம்முடைய அர்ப்பணிப்பை ஏறெடுத்தார்.

கிரயப்பத்திரத்தில் கையெழுத்திடப்பட்டு, கிரயத்தினை நிறைவேற்றுவது போன்று நமது கர்த்தர் இரண்டாவதாகக் கல்வாரியில் காரியத்தினை நிறைவேற்றி முடித்தார்.

பணமானது வங்கியில் வைக்கப்பட்டிருக்கும் கணக்கில் வந்தடைவது போன்று, மூன்றாவதாக நமது கர்த்தர் தம்மைப் பிதாவின் கரங்களில் கையளித்துவிட்டார் - "உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார்

வங்கியில் காணப்படும் பணத்தை நீங்கள் வைப்புத்தொகையாக வைத்திருப்பது (deposit) அல்லது பயன்படுத்துவதுபோன்று, நான்காவதாக நமது கர்த்தர் பிதாவின் கரங்களில் காணப்பட்ட அந்தப் புண்ணியத்தினைக் கிரயமாக (deposit) வைத்திருந்தார் அல்லது அதைப்பயன்படுத்துவார். அது உங்கள் கணக்கில் காணப்படும். உங்களால் மாத்திரமே காசோலையைக் கொடுக்க முடியும். இதுபோலவே நமது கர்த்தருடைய புண்ணியமும் பிதாவின் கரங்களில் தம்முடைய சொந்த கணக்கிலேயே காணப்பட்டது மற்றும் அவராலும் காசோலைக்கொத்த காரியத்தைச் செய்யலாம் மற்றும் அந்தப் புண்ணியத்தைச் சாற்றிடலாம் மற்றும் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று அவர் அப்புண்ணியத்தினை நமக்குச் சாற்றியுள்ளார். மேலும் அது நமக்குச் சாற்றப்பட்டுள்ளதற்கு ஆதாரம், பெந்தெகொஸ்தே நாளின்போது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் சில அங்கத்தினர்கள் மீது ஆசீர்வாதம் கடந்துவந்ததில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

### 3. (Q444:1) ஜீவ-உரிமைகளுக்கான தேவை.

கேள்வி (1911-Z4922)-1- தம் வசத்தில் ஒருவேளை பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளைக் கிறிஸ்து பெற்றிருக்கவில்லையெனில், அவரால் உலகத்திற்கான நித்திய பிதாவாக முடியுமா?

பதில் - ஒருவேளை நமது கர்த்தராகிய இயேசு ஆயிரவருட ஆளுகையின்போது ஆதாமிற்கும், அவரது சந்ததிக்கும் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை கொடுத்துவிடுவதற்கென, அந்த உரிமையினைச் சொத்தாகப் பெற்றிருக்கவில்லையெனில், அவரைக்குறித்து அந்தச் சந்ததியின் பிதா என்று கூறமுடியாது. கொடுத்துவிடுவதற்கென்று ஜீவனை - பூமிக்குரிய ஜீவன் ஒன்றை அவர் பெற்றிராதது வரையிலும் அவரால் மனுக்குலத்தின் சந்ததியை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது.

### 4. (Q445:1) ஜீவ-உரிமைகளானது இயேசுவினால் சபைக்குச் சாற்றப்பட்டுள்ளதா?

கேள்வி (1912)-1- ஜீவ-உரிமைகளை இயேசு சபைக்குத் தரிப்பித்துள்ளதாக/ சாற்றியுள்ளதாகத் தாங்கள் போதிக்கின்றீர்களா?

பதில் - உண்மையில் அப்படித்தான்! இயேசு இரண்டு ஜீவ-உரிமைகளை உடையவராயிருந்தார். மனிதனென ஜீவிப்பதற்கென உரிமை ஒன்றினை அவர் பெற்றிருந்தார். அவர் தமது பூமிக்குரிய ஜீவனை laid down/கொடுத்து வைத்திட்டார்; அது அவரிடமிருந்து forfeit/பறிமுதல் செய்யப்படவில்லை. அதை அவர் திவ்விய ஏற்பாட்டிற்கு இசைவாக "மரணபரியந்தம்" laid down/கொடுத்து வைத்திட்டார். அவரால் கொடுத்து வைக்கப்பட்ட அது இன்னமும் அவருடையதே.

உதாரணத்திற்கு என்னுடைய புத்தகத்தை நான் இங்கே மேஜையில் வைத்துள்ளேன் (laid down) என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் அது கொஞ்சம் நேரம் மேஜையிலேயே இருக்கட்டும்; எனினும் அது இன்னமும் என்னுடையதே மற்றும் நான் திரும்பிவந்து, மீண்டும் எனது புத்தகத்தை எடுத்துக்கொள்வதற்கு முழு உரிமையுடையவனாக இருக்கின்றேன். அப்படித்தானே? இயேசு தமது ஜீவனைப் பறிக்கொடுக்கவில்லை. அவர் தாமே முன்வந்து தம் ஜீவனைக் கொடுத்து வைக்க மாத்திரமே செய்தார். "அதைக் கொடுத்து வைப்பதற்கும் மற்றும் மறுபடியுமாய் வந்து பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரம் காணப்படுகின்றது." மரணத்திலிருந்து அவர் உயிர்த்தெழுவதற்கான வேளை வந்தபோதோ, அவர் திவ்விய தளத்தில் தேவனுடைய குமாரனென, உயர்த்தளத்தில் ஜீவனைப் பெற்றுக்கொண்டார். அது அவர் தமது ஜீவனை ஒப்படைத்ததற்கான வெகுமானமாகும். இது "வெகுமான ஜீவனாகும்." இது அவருக்கான தேவனுடைய அன்பளிப்பாகும். இது மரணம் வரையிலுமான அவரது கீழ்ப்படிதலுக்கான வெகுமானமாகும். பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை அவர் இன்னமும் உடையவராயிருந்தார், ஆனால் வெகுமதியாக அவருக்குத் திவ்விய ஜீவன் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திவ்விய ஜீவனை அவர் பெற்றவராயிருக்க, பூமிக்குரிய ஜீவனுக்கான அந்தப் பூமிக்குரிய உரிமையையும்கூட அவர் உடையவராயிருந்தார் மற்றும் அதை அவர் விருப்பம் போல் கையாள முடிந்தவராய்க் காணப்பட்டார். அது தேவனுடைய கரங்களில் காணப்பட்டது;"பிதாவே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்." இதை அவர் யாருக்கேனும் apply/பயன்படுத்தினாரா? இல்லை! இயேசு திவ்விய ஜீவனுக்கான உரிமையினை உடையவராயிருந்தது போன்று, அவர் தம்முடைய பூமிக்குரிய உரிமைகளையும் இன்னமும் உடையவராயிருந்தார். பூமிக்குரிய ஜீவனுக்கான தம்முடைய உரிமைகளை அவர் உலகத்திற்குக் கொடுத்துவிடுவதற்கு நோக்கம் கொண்டுள்ளார். பூமிக்குரிய ஜீவனுக்கான இந்த உரிமைகளை ஆதாமுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் வழங்குவதே, இந்த ஏற்பாடுகளைப் பண்ணினதற்கான தேவனுடைய நோக்கமாய்க் காணப்படுகின்றது. ஆனாலும் இப்பொழுதல்ல! அவர் இப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாகிய சபையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கின்றார். இயேசுவின் மூலமாய் பிதாவினிடத்திற்கு வருகிற நம் அனைவருக்கும், இயேசு "உத்தரவாதமாகிறார்." இப்படியே அவர் - தங்கள் சரீரங்களை "ஜீவபலிகளாக" ஒப்புக்கொடுத்துள்ள அனைவருக்கும் இருக்கின்றார். இவர்களைத் தம்முடைய சொந்த புண்ணியத்தின் வாயிலாக ஏற்றுக்கொண்டு, நிறுத்துகின்றார். புண்ணியத்தினால் imputation/சாற்றப்படுவதற்கும், அது கொடுத்துவிடப்படுவதற்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது. ஒருவேளை நீங்கள் என்னிடம் பணம் கொஞ்சம் கேட்க மற்றும் நான் உங்களுக்குக் காசோலை ஒன்றின் பின்னால் சம்மதம் எழுதிக்கொடுத்தால், அந்தக் காசோலையை நீங்கள் வங்கியில் சமர்ப்பித்து, அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இப்படியே இயேசுவின் புண்ணியத்தினுடைய விஷயத்திலும் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லலாம். அவர் தமது பூரண முழுமையினுடைய புண்ணியத்தினை நமக்குத் தரிப்பிக்கின்றார் அல்லது சாற்றுகின்றார் மற்றும் இப்படியாக நாம் நம்மைத் தேவனுக்கு முன்பு பரிசுத்தமான, ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான நிலைமையில் ஒப்புக்கொடுத்திடலாம்.

**5. (Q446:4) ஜீவ-உரிமைகள் -- ஜீவிப்பதற்கான உரிமை.**

கேள்வி (1916-Z5881)-4- "ஜீவிப்பதற்கான உரிமை" மற்றும் "ஜீவ-உரிமைகள்" ஆகிய வார்த்தைகள் அர்த்தப்படுத்துவது என்ன? இவ்விரண்டு பதங்களுக்கு இடையிலான வித்தியாசம் என்ன?

பதில் - தேவனுடன் இசைவாய்க் காணப்படுவதன் மூலம் ஜீவிப்பதற்கான உரிமையினை ஒருவர் பெற்றுக்கொள்ளலாம்; காரணம் தம்முடைய அறிவுடைய சிருஷ்டிகள் யாவும், தம்முடைய திவ்விய பிரமாணங்களுக்கும், அதன் நிபந்தனைகளுக்கும் இசைவாய் ஜீவிக்கும் பட்சத்தில் தொடர்ந்து ஜீவிக்கலாம் என்று தேவன் ஏற்பாடு பண்ணியிருந்தார். ஆகையால் ஜீவிப்பதற்கான உரிமை என்பது ஆரம்பத்தில் தகப்பனாகிய ஆதாமினால் அனுபவிக்கப்பட்ட சிலாக்கியமாய்க் காணப்படுகின்றது. அவர் ஜீவிப்பதற்கான உரிமை ஒன்றினைப் பெற்றவராயிருந்தார் மற்றும் அவர் பாவம் செய்யாதிருந்தாரானால்

அந்த உரிமையானது அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருக்காது. இயேசுவும்கூட ஜீவிப்பதற்கான உரிமை ஒன்றினைப் பெற்றிருந்தார். உலகத்திற்குள் வருவதற்கு முன்பு மாத்திரமல்லாமல், மனிதனாகிய இயேசுவான பிற்பாடும் அவர் அந்த உரிமையினை உடையவராயிருந்தார். அந்த உரிமையின் காரணமாகத்தான் அவரால் தம்முடைய ஜீவனை ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்காகப் பலியாய்க் கொடுத்து வைக்க முடிந்தது. ஞானஸ்நானத்தின்போது அவர் தம்முடைய அர்ப்பணிப்பைப் பண்ணின பிற்பாடு, அவர் ஒரு மனிதனாக ஜீவிக்கும் உரிமை இல்லாதவராயிருந்தார்; காரணம் ஜீவிப்பதற்கான அந்த உரிமையினை அவர் விட்டுக்கொடுத்துவிட்டவராகக் காணப்பட்டார். ஆனால் ஏதோ சில திவ்விய பிரமாணத்தை மீறுவதன் மூலமோ அல்லது தம்முடைய ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை மீறுவதன் மூலமோ தவறாதது வரையிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு புதுச்சிருஷ்டியென ஜீவிப்பதற்கான உரிமையினை உடையவராயிருந்தார். மனுக்குலத்தின் உலகமானது, ஆயிரவருட யுகத்திற்குப் பிற்பாடு, பூரணத்தை அவர்கள் அடைந்த பிற்பாடு, அவர்கள் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவர்களை அவரும் ஏற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்கள் ஜீவிப்பதற்கான உரிமையினை உடையவர்களாய் இருப்பார்கள். தகப்பனாகிய ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக ஆரம்பத்தில் பெற்றிருந்த ஜீவனுக்கான அதே உரிமையினை மனுக்குலம் பெற்றுக்கொண்டவர்களாய் இருப்பார்கள்.

"ஜீவ-உரிமைகள்." இந்த வார்த்தையானது பல்வேறு விதங்களில் நாம் பயன்படுத்தக்கூடியவர்களாய் இருப்போம். இவ்வார்த்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தி, அவர் ஜீவ-உரிமைகளை உடையவர் என்று சொல்லுகையில், அவர் ஒரு மனிதனாக தம்முடைய ஜீவனை அர்ப்பணம் பண்ணினபோது, அவர் அந்த ஜீவனைப் பறிக்கொடுப்பதற்கு ஏதுவாய் உண்மையில் ஏதும் செய்திடவில்லை என்று நாம் சொல்லலாம். அதைக் lay down/ கொடுத்து வைக்க அவர் சம்மதித்திருந்தார்; அது நியாயமாய் அவருடையதாகும்; இல்லையேல் மறுபடியும் அந்த உரிமைகளை மற்றவர்களுக்குப் பயன்படுத்துவதற்கென்று அவற்றைப் பெற்றிராதவராகக் காணப்பட்டிருந்திருப்பார். அவரது தனிப்பட்ட நீதியினால் அந்த உரிமையினை அவர் தக்கவைத்துக் கொண்டவராய்க் காணப்பட்டார். ஆகையால் மனுஷீக ஜீவனுக்கான உரிமை ஒன்றினை அவர் இன்னமும் உடையவராகவே இருக்கின்றார்; காரணம் தம்மிடமிருந்து எடுக்கப்படும்படிக்கு அவர் அனுமதித்ததான இந்த ஜீவனை அவர் பறிக்கொடுத்து, இழந்துபோகவில்லை. அவருக்கென்று தனிப்பட்ட விதத்தில் இப்பொழுது மனுஷீக ஜீவனோ அல்லது ஜீவ-உரிமைகளோ தேவைப்படாது என்றபோதிலும், மனித ஜீவிக்கான ஜீவ-உரிமைகளை அவர் இன்னமும் உடையவராய் இருக்கின்றார்; அவருக்கென்று இந்த ஜீவ-உரிமைகள் தேவைப்படாததற்கான காரணம் அவர் மேலான ஒன்றைப் பெற்றுக்கொண்டவராக இருக்கின்றார் மற்றும் அவரால் ஒரே நேரத்தில் இரண்டு ஜீவன்களைப் பயன்படுத்த முடியாது. அவர் திவ்விய ஜீவ-உரிமைகளை உடையவராய் இருக்கின்றார்; ஆனால் அவர் இன்னமும் இந்த மனுஷீக ஜீவ-உரிமைகளைத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றார்; மேலும் இதை அவர் ஆதாமுக்காகவும், அவர் வாயிலாக இழந்துபோகப்பட்டதுமான அனைத்திற்காகவுமான முழுமையான ஈடாக, விலைக்கிரயமாகப் பயன்படுத்திப் பகிர்ந்தளிக்கவிருக்கின்றார்.

### 6. (Q568:2) மீட்கும்பொருள் - எங்கே provided/அளிக்கப்பட்டது?

கேள்வி (1916-Z5879)-2- மீட்கும்பொருள் விலையானது எங்கே அளிக்கப்பட்டது?

பதில் - தெய்வீக நோக்கத்தில், மீட்கும்பொருள் விலையானது உலகத்தோற்ற முதற்கொண்டே அளிக்கப்பட்டது; ஏனெனில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உலக தோற்றமுதற்கொண்டு அடிக்கப்பட்ட தேவாட்டுக்குட்டியாக திவ்விய சிந்தையில் காணப்படுகின்றார் என்று வேதவாக்கியங்களானது நமக்கு உறுதிபடுத்துகின்றதாய் இருக்கின்றது (வெளிப்படுத்தல் 13:8). இரண்டாம் நிலையில் பார்க்கும்போது, யேகோவா தேவனுக்கும், அவரது கனம் பொருந்திய லோகோசுக்கும் இடையே ஒப்பந்தம் போடப்பட்டபோது, மீட்கும்பொருள் விலை அளிக்கப்பட்டதாய் இருக்கின்றது. இன்னொரு கோணத்தில் பார்க்கையில் லோகோஸ் மாம்சமாக்கப்பட்டு, முழு மனுஷீக

பூரணத்தை முப்பதாம் வயதில் அடையாதது வரையிலும் மீட்கும்பொருள் விலையானது கொடுக்கப்படவில்லை என்றும் சொல்லப்படலாம்.

அப்போதுதான் நமது கர்த்தரினால் தேவ ஏற்பாட்டிற்கு இசைவாக மீட்கும்பொருள் விலையாகிட முடியும் மற்றும் தம்மையே மீட்கும்பொருள் விலையாகக் கொடுத்திட முடியும். அவர் தேவனுடன் உடன்படிக்கைக்குள் பிரவேசித்து, மரணப்பரியந்தம் தம்முடைய ஜீவனை அர்ப்பணிப்பதை ஞானஸ்நானம் மூலம் அடையாளப்படுத்துவதற்கு முன்புவரையிலும், அவர் தம்மை இந்த மீட்கும்பொருள் விலையெனக் கொடுத்திடவில்லை. அவர் இப்படி உடன்படிக்கைக்குள் பிரவேசித்தப் பிற்பாடும், அது முழுமையாகிடவில்லை; ஏனெனில் அதனோடுகூட நிபந்தனைகள் சம்பந்தப்பட்டிருந்தன. அங்கு அவரது சித்தம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அது பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் தமது முழுமையான கீழ்ப்படிதலை, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் காண்பிக்க வேண்டியிருந்தது. "முடிந்தது" என்று கூறி, அவர் கல்வாரியில் மரித்தபோது அவரது பலி நிறைவடைந்தது. மீட்கும்பொருள் விலையினை laid down/ கொடுத்து வைத்திடும் வேலையினை அவர் நிறைவேற்றிவிட்டார்; அதாவது மீட்கும்பொருள் விலையினை முழுமையாய்க் அளித்துவிட்டார் (provided). மீட்கும்பொருள் விலையினை அளிப்பதற்கும் (providing) மற்றும் மீட்கும்பொருள் விலையினைப் பயன்படுத்துவதற்கும் அல்லது பகிர்ந்தளிப்பதற்கும் (giving or appropriating or delivering) இடையே உள்ள வித்தியாசத்தினை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இயேசு மரித்தபோது, மீட்கும்பொருள் விலைக்கொடுத்து வைக்க மாத்திரமே பட்டது; மரணத்தினின்று மனிதனை விடுவிக்கத்தக்கதாக, அதைச் செயல்படுத்தும் விதத்தில், அது இன்னமும் பயன்படுத்தப்படவில்லை.

**7. (Q568:4) மீட்கும்பொருள் கல்வாரியில்** paid/செலுத்தித் தீர்க்கப்பட்டுவிட்டதா?

கேள்வி (1916-Z5879)-4- மீட்கும்பொருளானது கல்வாரியில் paid/செலுத்தித் தீர்க்கப்பட்டுவிட்டதா?

பதில் - இதைக்குறித்து நாம் ஏற்கெனவே விவரித்திருக்கின்றோம்; அதாவது மீட்கும்பொருளானது கல்வாரியில் (laid down) கொடுக்கப்பட்டது மற்றும் பிற்பாடு நீதியின் கரங்களில் வைக்கப்பட்டுள்ளது; ஆனால் ஒப்பந்தத்தை முடிக்கும் விதத்தில் அது இன்னமும் paid over/செலுத்தித் தீர்க்கப்படவில்லை - அது எதிர்க்காலத்திற்கென்று வைக்கப்பட்டுள்ளது. "பிதாவே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று இயேசு கூறினபோது, மீட்கும்பொருளானது சிலுவையில் (laid down) கொடுத்து வைக்கப்பட்டது. இப்படியாக இயேசு மீட்கும்பொருள் விலைக்கிரயத்தினைப் பயன்படுத்திடாமல், அதைச் சேமிப்பாக/வைப்பாக (deposit) வைத்துவிட்டார்.

**8. (Q569:1) மீட்கும்பொருள் - கடந்த காலத்தில் - தற்காலத்தில் - எதிர்க்காலத்தில்.**

கேள்வி (1916-Z5879)-1- மீட்கும்பொருள் விலையானது paid/செலுத்தித் தீர்க்கப்பட்டுவிட்டதா?

பதில் - இல்லை! ஏற்கெனவே நாம் கொடுத்திருக்கும் காரணங்களின் நிமித்தம் இல்லை என்று நாம் சொல்லுவோம்; இன்னுமாகச் சபை முழுமையாக அவளது கர்த்தருடன் மகிமையடைவது வரையிலும் மீட்கும்பொருள் விலைக்கிரயமானது முழுமையாய்ச் செலுத்தித் தீர்க்கப்படாது (not to be paid) என்றும் நாம் சொல்கின்றோம். மகிமையடைந்த பிற்பாடு அது முழு உலகத்தின் சார்பாகச் paid/செலுத்தித் தீர்க்கப்பட்டு, மரணத்தினின்று முழு உலகமும் விடுவிக்கப்படுவார்கள் மற்றும் ஆதாமின் காரணமான ஆக்கினைத் தீர்ப்பும் இரத்துச் செய்யப்படும்.

**9. (Q569:2) மீட்கும்பொருள் இயேசுவினால் எப்போது (dispose) பகிர்ந்தளிக்கப்படும்?**

கேள்வி (1916-Z5879)-2- இயேசு பரமேறின பிற்பாடு மீட்கும்பொருள் விலைக்கிரயத்தினை என்ன செய்தார்?

பதில் - அதை அவர் ஏற்கெனவே நீதியின் கரங்களில் சேமிப்பாக/வைப்பாக (deposit) வைத்துவிட்டார். மனுஷீக ஜீவ-உரிமையானது, விலைக்கிரயமானது இன்னும் அவர் வசத்திலேயே உள்ளது. அதில் ஒரு பங்கை இன்னும் முழு வளர்ச்சியடையாத தம் சபைக்குத் தரிப்பிப்பதன்/சாற்றுவதன் மூலம் அதைக் கடனாக வழங்குவது அல்லது குறுகிய கால பயன்பாட்டிற்காக வழங்குவது என்பது அவரது அடுத்தக்கட்ட நடவடிக்கையாகும்.

**10. (Q574:2) மீட்கும்பொருள் - ஜீவ-உரிமைகள் என்பதன் அர்த்தம்.**

கேள்வி (1916)-2- "ஜீவ-உரிமைகள்" எனும் வார்த்தைக்கான அர்த்தம் என்ன? மனுக்குலம் எப்போதேனும் "ஜீவ-உரிமைகளை" அடையுமா?

பதில் - வெவ்வேறு மனங்களானது "ஜீவ-உரிமைகள்" எனும் வார்த்தைக்கு வெவ்வேறு அர்த்தங்களைச் சாற்றக்கூடும். நாம் ஓர் அர்த்தத்தினை இதோ தெரிவிக்கின்றோம்:- ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது அவர் ஜீவ-உரிமைகளை உடையவராயிருந்தார்; காரணம் அவர் ஒருவேளை பூரணமாய்க் காணப்பட்டும், தேவனுடன் இசைவான நிலைமையினைத் தக்கவைத்தும் இருந்தாரானால் அவர் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தேவன் திட்டம் பண்ணியிருந்தார். ஆகையால் அவர் தேவனுடைய ஏற்பாடு மற்றும் வாக்குறுதியின் கீழ் ஜீவனுக்கான உரிமை ஒன்றை உடையவராயிருந்தார். மேலும் இயேசுவும் ஆதாமின் ஜீவ-உரிமைகளை உடையவராயிருந்தார், காரணம் அவர் பரிசுத்தராயும், மாசில்லாதவராயும், குற்றமற்றவராயும், பாவிகளுக்கு விலகினவராயும், பாவம் அறியாதவராயும் இருந்தார். ஆகையால் தகப்பனாகிய ஆதாமுக்கு இருந்ததுபோன்ற ஜீவ-உரிமைகளை இயேசுவும் உடையவராயிருந்தார். என்ன நேர்ந்தாலும் மரணபரியந்தமும் பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக, இயேசு தம்முடைய பூமிக்குரிய ஜீவ-உரிமைகளைத் தாமாய் அர்ப்பணித்தபோது, அவரது **ஜீவ-உரிமைகள்** விஷயத்தில் அத்துமீறல் பண்ணப்பட அவர் அனுமதித்தவராய் மாத்திரமே காணப்பட்டார், மாறாக அதைக் கைநெகிழவிடவில்லை. அவரது ஜீவ-உரிமைகளின் விஷயத்தில் தலையிடப்படுவதற்கு எந்த அவசியமும் இல்லாதிருந்தது. தம்மைப் பாதுகாக்க அவர் பிதாவிடம் லேகியோன் தூதர்களைக் கேட்டுப் பெற்றுக்கொண்டிருந்திருக்க முடியும் என்று அவர் கூறியிருக்கின்றார். ஆனால் இப்படிச் செய்ய அவர் விரும்பவில்லை. பழைய ஏற்பாட்டின் நிழல்களினாலும், தீர்க்கத்தரிசனங்களினாலும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள தேவசித்தத்தை அவர் அறிந்திருந்தார் மற்றும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் அவர் பிரியங்கொண்டிருந்தார் மற்றும் தாமாய் விட்டுக்கொடுத்து, தம்முடைய **ஜீவனை** எடுப்பதற்கு மனிதர்களை அனுமதித்தார். மனுஷர்களால் **ஜீவனுக்கான அவரது உரிமைகளை** எடுத்துப்போட முடியாது; அவர்கள் அவரை மாம்சத்தில் கொலைசெய்தாலும் மற்றும் பிதா அவரை ஆவிக்குரிய தளத்தில் உயிர்த்தெழுப்பினாலும், அந்தத்தளத்திலுள்ள **ஜீவ-உரிமைகளை** அவர் உடையவராகவே இருந்தார் மற்றும் மாம்ச ஜீவனுக்கான உரிமைகளை அவர் இன்னமும் உடையவராகவே இருக்கின்றார். எப்படி? காரணம் அவற்றை அவர்களிடத்தில் இயேசு கொடுத்துவிடவில்லை. அவற்றைத் தம்மிடமிருந்து தகாதவிதமாய் எடுத்திடுவதற்கு இயேசு மனிதர்களை அனுமதிக்க மாத்திரமே செய்தார். மனுஷர்கள் அவற்றை ஆதாமிற்காகவும், அவரது சந்ததிக்காகவும் பயன்படுத்தத்தக்கதாக அவர் அவற்றை அவர்களிடத்தில் கொடுத்துவிடவில்லை. அவைகள் இன்னமும் அவரது ஜீவ-உரிமைகளாகவே இருக்கின்றது மற்றும் அவர் மரித்தபோது, "என் ஆவியை - என் ஜீவ உரிமைகளை - உம் கரத்தில் ஒப்புவிக்கிறேன்" என்றே கூறினார். **அவர் ஒப்புவித்தவைகளானது, பூமிக்குரிய ஜீவ-உரிமைகளாக இருந்தன** மற்றும் அவை இன்னமும் பிதாவின் கரங்களில் காணப்படுகின்றது மற்றும் அவை இறுதியில் ஆயிரவருட காலத்தின்போது தகப்பனாகிய ஆதாமிற்கும், அவரது சந்ததியார் யாவருக்கும் கடந்துவரும்.

